




PRGI No. TNBIL/25/A1569

வைகறையில்

# பேப்பர்பாய்

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY








சென்னை மலர்: 01 இதழ்: 240 12.04.2026 ஞாயிற்றுக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 240 | Sunday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMIL NADU AND PUDUCHERRY


## இன்றைய நாள்

ஞாயிற்றுக்கிழமை
(12-04-2026)
விசுவாவசு ஆண்டு, பங்குனி-29
பிறை: தேய்பிறை
திதி
தசமி இரவு 10.28 வரை
பிறகு ஏகாதசி
நட்சத்திரம்:
12.33 வரை பிறகு அவிட்டம்
திருவோணம் நண்பகல்.
யோகம்
அமிர்த / மரணயோகம்
ராகுகாலம்
மாலை 4.30-6.00 மணி
எமகண்டம்
நண்பகல் 12.00-1.30 மணி
சூலம் - மேற்கு.
நல்ல நேரம் :
காலை 7-8 மணி
மாலை 3-4 மணி

| | |
|---|---|
| மேஷம் | இன்பம் |
| ரிஷபம் | செலவு |
| மிதுனம் | தெளிவு |
| கடகம் | உதவி |
| சிம்மம் | நன்மை |
| கன்னி | உண்மை |
| துலாம் | பரிவு |
| விருச்சிகம் | பாசம் |
| தனுசு | உறுதி |
| மகரம் | மேன்மை |
| கும்பம் | போட்டி |
| மீனம் | பரிவு |

# திமுகவின் வெற்றியைத் தடுக்க முடியாது

## முதல்வர் மு.க. ஸ்டாலின் உறுதி!

**புதுக்கோட்டை, ஏப்.12:**

234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி அமோகமாக வெற்றி பெறும்என்றுபுதுக்கோட்டையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவைத் தேர்தல் வருகிற ஏப். 23 ஆம் தேதி நடைபெறவுள்ளதையொட்டி கட்சித் தலைவர்கள், வேட்பாளர்கள் தீவிரமாக பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.

திமுக தலைவரும் முதல்வருமான மு.க. ஸ்டாலினும் தமிழகம் முழுவதும் பிரசாரம் மேற்கொண்டு திமுக மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்களுக்கு வாக்கு சேகரித்து வருகிறார்.

தஞ்சாவூரில் தனது 4-ம் கட்ட சுற்றுப்பயணத்தைத் தொடங்கிய அவர் இன்று புதுக்கோட்டை,திருப்பத்தூரில் பிரசாரம் செய்கிறார்.

இதற்காக நேற்று 11ம் தேதி காலை புதுக்கோட்டை வந்த அவர் நடைப்பயிற்சியின்போது மக்களிடம் வாக்கு சேகரித்தார்.



இதன்பின்னர் செய்தியாளர்களுடன் பேசிய அவர், "திமுகவின் வெற்றி வாய்ப்பு அமோகமாக சிறப்பாக இருக்கிறது. தோல்வியில் உச்சத்திற்குச் சென்றுவிட்டார் பழனிசாமி. அதனால் விரக்தியில் பேசி வருகிறார்.

இங்குள்ள மக்களின் எழுச்சியைப் பார்த்தால் 234 தொகுதிகளிலும் திமுக கூட்டணி அமோகமாக வெற்றி பெறும். தமிழ்நாட்டிற்கு எத்தனை தலைவர்கள் வந்தாலும், எத்தனை கட்சிகள் வந்தாலும் அவர்கள் என்ன செய்தாலும் திமுக கூட்டணியின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது.

அதிமுகவை டில்லியில் அடமானம் வைத்துவிட்டார்கள். அதிமுகவை குத்தகைக்கு விட்டுவிட்டார்கள். அதனால் தமிழ்நாட்டுக்கும் தில்லிக்கும்தான் போட்டி.

நடிகரின் வாகனத்தின் பின்னால் சென்று இளைஞர்கள் விபத்துக்குள்ளாவதை நாட்டு மக்கள் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் விரைவில் திருந்துவார்கள்" எனத் தெரிவித்தார்.

### தூத்துக்குடியில் இன்று (ஏப். 12) ஒரே மேடையில் மு.க. ஸ்டாலின், ராகுல்!

தமிழக பேரவைத் தேர்தல் அறிவிக்கப்பட்டு 3 வாரங்கள் ஆகியும் காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி இன்னும் தமிழகம் வரவில்லை என்ற சர்ச்சை எழுந்தது. கடந்த வாரம் புதுவை வந்த அவர், தமிழகத்திற்கு வரவில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்தது. இந்நிலையில் ராகுல் காந்தி இன்று(ஏப். 12,ஞாயிறு) தமிழகம் வரவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாளை காலை தில்லியில் இருந்து சென்னை விமான நிலையம் வரும் ராகுல் காந்தி, ஸ்ரீபெரும்புதூரில் தந்தை ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்திய பின்னர் ஸ்ரீபெரும்புதூர் தொகுதி காங்கிரஸ் வேட்பாளரும் தமிழக காங்கிரஸ் தலைவருமான செல்வப்பெருந்தகைக்கு ஆதரவாக பிரசாரம்



செய்யவுள்ளதாகவும் அப்பகுதியில் சாலை வலம் மேற்கொள்ளவிருப்பதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரே மேடையில் ஸ்டாலினும் ராகுலும்... பின்னர் தூத்துக்குடியில் முதல்வர் மு.க. ஸ்டாலினும் ராகுல் காந்தியும் இணைந்து தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட உள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஏற்கெனவே முதல்வர் மு.க. ஸ்டாலின், இன்று (ஏப். 12, ஞாயிறு) மாலை 4 மணிக்கு பரமக்குடியிலும் இரவு 7 மணிக்கு தூத்துக்குடியிலும் பிரசாரம் செய்கிறார்.

இரவு 7 மணி தூத்துக்குடி பிரசாரத்தில் ராகுல் பங்கேற்பார் என்றும் கூறப்படுகிறது. பின்னர் ஏப். 15, 16 தேதிகளிலும் ராகுல் காந்திதமிழகம் வரவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

## தவெகவினருக்கு விஜய் வைத்த கோரிக்கை

**சென்னை, ஏப்.12:**

விஜய் எக்ஸ் தளத்தில் பகிர்ந்த பதிவில் கூறியிருப்பதாவது: என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள் அனைவருக்கும் வணக்கம். 'வாகை சூடும் வரலாறு திரும்பும்' பயணத்தில் உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அளப்பரியது, இன்றியமையாதது. மாற்றத்திற்கான முதன்மைச் சக்தியான நாம், நமது வெற்றிப் பாதையில் சரியாகப் பயணித்துக் கொண்டிருக்கிறோம்.

தேர்தல் நாள் வேகமாக நெருங்கி வரும் இந்த வேளையில் ஒரு வேண்டுகோள். வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்களாக தங்களை தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக் கொண்டு நம்மோடு தோழர்களாகப் பயணிப்பவர்கள், கட்சியின் மீது பேரன்பு கொண்டுள்ள என்னுடைய நண்பா, நண்பிகள் அனைவரும் களத்தில் இறங்கிப் பணியாற்றுங்கள். அடுத்த 10 நாட்களும் உங்களுக்கு உகந்த நேரத்தில் காலை, மாலை என இரு வேளையும் அவரவர் வசிக்கும் இடங்களில் தினமும் நம் சொந்தங்களாகிய தமிழ்நாட்டு மக்களை வீட்டுக்கு வீடு தேடித் தேடி நேரில் சந்தியுங்கள். தவெக வேட்பாளர்களுக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு வேண்டுகோள் வையுங்கள்.

இந்தத் தேர்தல் நமக்கானது மட்டுமல்ல, மாபெரும் மாற்றத்திற்கான, ஒரு தலைமுறைக்கான தேர்தல் என்பதை விளக்குங்கள். தன்னலமற்ற உழைப்பைச் செலுத்தி, நமது வெற்றிப் பயணத்திற்கு வலு சேருங்கள். ஜனநாயகத்தை உண்மையான மக்களாட்சியை அமைப்போம்! வாகை சூடும் வரலாறு திரும்புகிறது! நல்லதே நடக்கும்! வெற்றி நிச்சயம்! என கூறினார்..

## மத்திய பார்வையாளர்களுடன் தலைமை தேர்தல் ஆணையர் ஆலோசனை: தேர்தலை சுதந்திரமாக நடத்த அறிவுறுத்தல்

**சென்னை, ஏப்.12:**

தமிழகத்தில் ஏப்.23-ம் தேதி வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. மொத்தம் உள்ள 234 தொகுதிகளில் பொது பார்வையாளர்கள் 136 பேர், செலவின பார்வையாளர்கள் 150 பேர், காவல் பார்வையாளர்கள் 40 பேர் என 326 பார்வையாளர்கள் மற்றும் சிறப்பு செலவின பார்வையாளர் ஆகியோர் தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

தமிழகம் முழுவதும் பணியமர்த்தப்பட்டுள்ள மத்தியப் பார்வையாளர்களுக்கான (பொது, காவல் மற்றும் செலவினப் பார்வையாளர்கள்) ஆய்வுக் கூட்டம் தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் தலைமையில் டெல்லியில் நேற்று நடைபெற்றது.

இதில் தேர்தல் ஆணையர்கள் எஸ்.எஸ்.சாந்து மற்றும் விவேக் ஜோஷி ஆகியோர் பங்கேற்றனர். தமிழக தலைமைத் தேர்தல் அதிகாரி அர்ச்



சனா பட்நாயக் மற்றும் மத்திய பார்வையாளர்கள் 327 பேர் காணொலி காட்சி வாயிலாக கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் தலைமை தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் அறிவுறுத்தியதாவது: எவ்வித வன்முறையுமின்றி, திருவிழா மனநிலையோடு சுதந்திரமாகவும், நேர்மையாகவும் தேர்தல் நடத்தப்படுவதை மத்திய பார்வையாளர்கள் உறுதி செய்ய வேண்டும்.

தேர்தல் நடத்தை விதிகளை தீவிரமாக அமல்படுத்த வேண்டும். விதிமீறல்கள் குறித்த புகார்கள் மீது உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பார்வையாளர்கள் தங்களது தொடர்பு எண்களையும், பொதுமக்கள், அரசியல் கட்சிகள், வேட்பாளர்கள் அல்லது அவர்களது முகவர்களிடமிருந்து புகார்களை பெறுவதற்கான இடம் மற்றும் நேரத்தையும் நன்கு விளம்பரப்படுத்த வேண்டும். வாக்குச்சாவடி தலைமை அலுவலர்களுக்கான பயிற்சிகள் முறையாக வழங்கப்பட்டுள்ளதா என்பதை மேற்பார்வையிட வேண்டும்.

வாக்குச்சாவடிகளில் கைபேசியை பாதுகாப்பாக வைக்கும் வசதி மற்றும் வரிசையில் காத்திருக்கும் வாக்காளர்கள் அமர்வதற்கான வசதி உள்ளிட்ட குறைந்தபட்ச அடிப்படை வசதிகள் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அனைத்து வாக்குச்சாவடிகளிலும் போதுமான குடிநீர் மற்றும் நிழல் வசதிகள் செய்யப்பட்டுள்ளதை உறுதிப்படுத்த வேண்டும்.

இணையவழி ஒளிபரப்பு (WEBCASTING) கண்காணிப்பு கட்டுப்பாட்டு அறை ஏற்பாடுகள் முறையாகச் சரிபார்க்கப்பட வேண்டும்.

இவ்வாறு அவர் அறிவுறுத்தினார்.

## இணையத்தில் 'ஜனநாயகன்' கசிவு: படக்குழுவினர் டிஜிபியிடம் புகார் - ரஜினி, கமல் கண்டனம்

**சென்னை, ஏப்.12:**

'ஜனநாயகன்' படத்தில் இடம்பெற்றுள்ள சுமார் 5 நிமிட வீடியோ காட்சி இணையத்தில் கடந்த 9-ம் தேதி வெளியானது. பின்னர் 'ஜனநாயகன்' முழு திரைப்படமும் இணையத்தில் சட்டவிரோதமாக மர்ம நபர்களால் வெளியிடப்பட்டது. இணையம் மற்றும் வலைதளங்களில் இதுவும் வேகமாக பகிரப்பட்டது. திரைப்படத் தணிக்கை வாரியத்தின் சான்றிதழுக்காக காத்திருக்கும் சூழலில், முழு படமும் இணையத்தில் வெளியானது விஜய் உள்ளிட்ட படக் குழுவினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இணையத்தில் முழு திரைப்படத்தையும் மர்ம நபர்கள் சட்ட விரோதமாக வெளியிட்டதற்கு நடிகர் சங்க பொதுச் செயலாளர் விஷால், நடிகர்கள் ரஜினிகாந்த், சூர்யா, சிரஞ்சீவி, சிவகார்த்திகேயன், விஜய் ஆண்டனி, ஜீவா, ஜி.வி.பிரகாஷ் குமார், தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி உட்பட திரையுலகினர் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

நடிகர் ரஜினிகாந்த் தனது வலைதளப் பதிவில், 'ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் யாராலோ வெளியிடப்பட்டிருப்பது அதிர்ச்சி, வேதனையை அளிக்கிறது. திரை அமைப்புகள் இதற்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும். அரசு இதைச் செய்தவர்களைக் கண்டுபிடித்து கடுமையான தண்டனை அளிக்க வேண்டும். இது போன்ற குற்றம் இனியும் தொடரக்கூடாது' என்று தெரிவித்துள்ளார்.

நடிகர் கமல்ஹாசன் தனது எக்ஸ் பக்கத்தில் கூறியிருப்பதாவது: "ஜனநாயகன் திரைப்படம் கசிந்திருப்பது ஒரு விபத்தல்ல. அது ஒட்டுமொத்த அமைப்பின் தோல்வியால் விளைந்ததாகும். உரிய நடைமுறைகள் காலத்தே எடுக்கப்பட்டிருந்தால், நாம் இந்த நிலைக்குத் தள்ளப்பட்டிருக்க மாட்டோம். சினிமாவை உண்மையாக நேசிப்பவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து, கடந்த காலங்களில் நீங்கள் எனக்குத் துணையாக நின்றது போலவே, இப்போது இத்திரைப்படத்தைச் சட்டப்பூர்வமாகத் திரையரங்குகளில் பார்த்துப் படத்திருட்டிற்குத் தகுந்த பதிலடி கொடுப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்" இவ்வாறு கமல்ஹாசன் தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனமான 'பெப்சி' அமைப்பும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

## பூமிக்குத் திரும்பிய ஆர்டெமிஸ்-2 குழு!

**வாஷிங்டன், ஏப்.12:**

நிலவை ஆய்வு செய்த நாசாவின் ஆர்டெமிஸ் குழுவினர் பாதுகாப்பாக பூமிக்குத் திரும்பினர். 10 நாள் ஆய்வை வெற்றிரமாக முடித்துக்கொண்டு 4 வீரர்களும் பூமிக்கு வந்தனர்.

ஆர்டெமிஸ்-2 விண்கலமும், அதன் நான்கு பேர் கொண்ட குழுவும் பசிபிக் பெருங்கடலில் பாதுகாப்பாகத் தரையிறங்கினர்.

ஓரியான் விண்கலம் மூலம் இந்திய நேரப்படி அதிகாலை சுமார் 5.37 மணிக்கு சான் டியாகோவுக்கு அருகே உள்ள கடல் பகுதியில் தரையிறங்கியது.

ஒரு பெண் உள்பட 4 விண்வெளி வீரர்கள் அடங்கிய இக்குழு, தற்போது அமெரிக்கா திரும்பியுள்ளனர்.

முன்னதாக, நிலவின் மறுபக்கத்தை அடைவதற்காக மனித வரலாற்றிலேயே முன்னெப்போதும் இல்லாத



வகையில் பூமியிலிருந்து சுமார் 2,52,756 மைல்கள் தொலைவுக்கு விண்வெளியில் பயணித்து இக்குழு புதிய சாதனை படைத்தது.

இதற்கு முன்னதாக 1970-இல், 'அப்போலோ 13' விண்கலம் மேற்கொண்ட தொலைதூர பயணமே சாதனையாகக் கருதப்பட்டது. தற்போது அச்சாதனையை முறியடித்துள்ள இக்குழு, நிலவின் மேற்பரப்பிலிருந்து சுமார் 4,070 மைல்கள் தொலைவில் பறந்தது.

நிலவின் மறுபக்கத்தைக் கடந்த சுமார் 6 மணி நேர ஆய்வின்போது, நிலவின் மேற்பரப்பில் விண்கற்கள் மோதுவதால் ஏற்படும் 'ஒளிப் பிழம்புகளை' விண்வெளி வீரர்கள் நேரடியாகக் கண்டு வியந்தனர்.

பூமியிலிருந்து என்றும் காண முடியாத நிலவின் அப்பகுதியை வீரர்கள் உன்னிப்பாகக் கவனித்தபோது, விண்கற்களின் மோதலால் நிலவின் தரைப்பகுதி அதிர்வதை அவாகள் பதிவு செய்தனர்.

நிலவின் மறுபக்கத்தைக் கடக்கும்போது சுமார் 40 நிமிடங்கள் பூமிக்கும் விண்கலத்துக்கும் இடையிலான தகவல் தொடர்பு முற்றிலும் துண்டிக்கப்பட்டது. இது விண்வெளிப் பயணத்தின் மிகவும் சவாலான பகுதியாகக் கருதப்பட்டது. மீண்டும் தொடர்பு கிடைத்ததும், வீராகள் உற்சாகத்துடன் தங்கள் அனுபவங்களைப் பகிா்ந்து கொண்டனர்.

இந்த நிலையில், விண்வெளி வீரர்கள் ரீட், விக்டர், கிறிஸ்டினா மற்றும் ஜெர்மி ஆகியோர் பாதுகாப்பாகத் தரையிறங்கினர்.




## உள்துறைச் செயலாளர் தீரஜ்குமார் மாற்றம்: தேர்தல் ஆணையம் உத்தரவு



**சென்னை, ஏப்.12:**
உள்துறைச் செயலாளர் தீரஜ்குமார் மாற்றம் செய்யப்பட்டு மணிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். தமிழகத்தில் தலைமைச் செயலாளர் முருகானந்தம், டிஜிபி வெங்கட்ராமன், போலீஸ் கமிஷனர் அருண், லஞ்ச ஒழிப்புத்துறை இயக்குநர் டேவிட்சன் தேவாசீர்வாதம், தாம்பரம், மதுரை கமிஷனர்கள், சேலம், தூத்துக்குடி கலெக்டர்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். மேலும் 8 எஸ்பிக்களும் மாற்றம் செய்யப்பட்டனர்.

இந்தநிலையில், உள்துறைச் செயலாளர் தீரஜ்குமார் மாற்றம் செய்யப்படுவார் என்று நேற்று தகவல்கள் வெளியாகின. அதேபோல உள்துறைச் செயலாளர் தீரஜ்குமார் மாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவருக்குப் பதில் புதிய உள்துறைச் செயலாளராக இந்து அறநிலையத்துறை செயலாளர் டாக்டர் மணிவாசன் நியமிக்கப்பட்டுள்ளார். அதேபோல, உளவுத்துறை ஐஜி செந்தில்வேலன் உள்ளிட்ட மேலும் சில அதிகாரிகளை மாற்ற தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

இது தமிழக அரசியல் வட்டாரத்தில் பெரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அதேபோல வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கார்க் மற்றும் சென்னையில் பணியாற்றும் சில போலீஸ் அதிகாரிகளை மாற்றவும் தேர்தல் ஆணையம் முடிவு செய்துள்ளதாக கூறப்படுகிறது.

## 'ஜனநாயகன்' இணையத்தில் வெளியானது பற்றி சிபிஐ விசாரணை கோர விஜய் தயாரா? - பாஜக கேள்வி



**சென்னை, ஏப்.12:**
ஆதவ் அர்ஜுனா மூலம் 'ஜனநாயகன்' படத்தை வெளியிட வைத்து விஜய் நடத்தும் சதி அரசியல் நாடகம் எடுபடாது என்று தெரிவித்துள்ள தமிழக பாஜக, படம் வெளியானது குறித்து சிபிஐ விசாரணை கோர தயாரா என்றும் சவால் விடுத்துள்ளது.

இது தொடர்பாக தமிழக பாஜக செய்தித் தொடர்பாளர் ஏ.என்.எஸ். பிரசாத் வெளியிட்டுள்ள அறிக்கையில், "'ஜனநாயகன்' படம் இணையத்தில் வெளியானதால் ரூ.500 கோடிக்கு மேல் தயாரிப்பாளருக்கு இழப்பு ஏற்படும் என்று சமூக வலைத்தளங்களில் விளம்பரப்படுத்தி, மக்களை ஏமாற்றி பரிதாப வாக்குகளைப் பெற விஜய் நாடகம் ஆடுகிறார்.

பாஜக மீதும் மத்திய அமைச்சர் எல். முருகன் மீதும் பொய் குற்றம் சாட்டியுள்ளார். தமிழகத்தின் பட்டியல் சமூக பிரதிநிதியாக நேர்மையோடு செயல்படும் மத்திய அமைச்சர் எல். முருகனை அவமதிக்கும் நோக்கத்துடன், அவதூறு பரப்பிவிட்டு அம்பேத்கர் தான் எங்கள் கொள்கை தலைவர் என்று கூறுவதற்கு விஜய் வெட்கப்பட வேண்டும். இது குறித்து சிபிஐ விசாரணையை கோர விஜய் தயாரா?

ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் வெளியானது குறித்து தமிழக காவல்துறையில் இதுவரை ஏன் புகார் அளிக்கப்படவில்லை? சென்சார் போர்டிலும் ஏன் முறையிடவில்லை?

ஜனநாயகம் திரைப்படம் இணையத்தில் கசிந்ததற்கு மத்திய அமைச்சர் முருகனும் காரணம் என்று ஆதவ் அர்ஜுனா கூறி இருப்பது வடிகட்டிய பொய். அவர் மீது பாஜக சட்ட நடவடிக்கைகளை எடுக்கும்.

எம்ஜிஆரையும் விஜயையும் இணைத்து பேசி அதிமுக ஓட்டுக்களை பிரிக்கலாம் என்றும், ஜனநாயகன் படம் விவகாரத்தில் பாஜகவிற்கு எதிராக அவதூறு பேசி வாக்காளர்களை குழப்பி ஆதாயம் தேடலாம் என்றும் ஆதவ் அர்ஜுனா கருதுகிறார். கீழ்த்தரமான அவரது இந்த பகல் கனவு பலிக்காது.

திமுகவுக்கு ஓட்டு போடுவது தற்கொலைக்குச் சமம் என்பதை தமிழக மக்கள் உணர்ந்து விட்டார்கள். திமுகவை வீழ்த்த வேண்டும் என்று நினைக்கின்ற வாக்காளர்கள் தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கே வாக்களிப்பார்கள்" என தெரிவித்துள்ளார்.

## 50 ஆண்டுகளாக மனிதர்கள் செல்லாத நிலையில் நிலவுக்கு சென்று பூமிக்கு திரும்பிய 4 விண்வெளி வீரர்கள்: புதிய யுகம் தொடங்கியுள்ளதாக 'நாசா' அறிவிப்பு



**வாஷிங்டன், ஏப்.12:**
நிலவைச் சுற்றி ஆய்வு செய்யும் வரலாற்றுச் சாதனை பயணத்தை முடித்துக்கொண்டு 4 விண்வெளி வீரர்கள் இன்று பத்திரமாக பூமிக்கு திரும்பினர். கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக மனிதர்கள் யாரும் நிலவுக்குச் செல்லாத நிலையில், அந்த சாதனையை முறியடிக்க அமெரிக்காவின் நாசா விண்வெளி ஆராய்ச்சி மையம் ஆர்டெமிஸ் 2 என்ற திட்டத்தை செயல்படுத்தியது. இதற்கு முன்னதாக 1970ம் ஆண்டில் அப்பல்லோ 13 விண்கலம் பூமியில் இருந்து 2 லட்சத்து 48 ஆயிரத்து 655 மைல் தூரம் வரை சென்றதே சாதனையாக இருந்தது. இந்த நிலையில், கடந்த 1ம் தேதி ஆர்டெமிஸ் 2 விண்கலத்தில் சென்ற வீரர்கள் அந்த பழைய சாதனையை முறியடித்து புதிய வரலாறு படைத்துள்ளனர்.

இந்த பயணத்தின் போது விண்வெளி வீரர்கள் நிலவின் மறுபக்கத்திற்குச் சென்று, பூமியில் இருந்து சுமார் 2 லட்சத்து 52 ஆயிரத்து 756 மைல் தொலைவு வரை பயணித்தனர். மனித வரலாற்றில் விண்வெளியில் இவ்வளவு தூரம் யாரும் சென்றதில்லை. மேலும், விண்வெளியில் இருந்து சூரிய கிரகணத்தையும் இவர்கள் கண்டு ரசித்தனர். இந்த வரலாற்றுப் பயணத்தில் நாசாவைச் சேர்ந்த ரீட் வைஸ்மேன், விக்டர் க்ளோவர், கிறிஸ்டினா கோச் மற்றும் கனடா விண்வெளி ஆய்வு மையத்தைச் சேர்ந்த ஜெரமி ஹேன்சன் ஆகிய 4 வீரர்கள் இடம்பெற்றனர். இவர்கள் பயணித்த ஓரியன் விண்கலம் நேற்று பசிபிக் கடலில் பாதுகாப்பாக வந்து இறங்கியது.

பூமிக்குள் நுழைவதற்கு சற்று நேரத்திற்கு முன்பு, வீரர்கள் ஒருவருக்கொருவர் கைகளை தட்டி மகிழ்ச்சியை பரிமாறிக் கொண்டனர். கடலில் இறங்கிய விண்கலத்தையும், அதில் இருந்த வீரர்களையும் அமெரிக்க கடற்படையின் யு.எஸ்.எஸ். ஜான் பி முர்தா கப்பல் மீட்டது. இந்த வெற்றியைக் கொண்டாடும் வகையில் அமெரிக்க செனட்டர் டெட் குரூஸ் கூறுகையில், 'இந்த வீரர்கள் தங்களின் வரலாற்றுச் சிறப்புமிக்க பயணத்தின் மூலம் புதிய தலைமுறை விண்வெளி ஆய்வாளர்களுக்கு பெரும் ஊக்கத்தை அளித்துள்ளனர்' என்று பாராட்டினார். எதிர்காலத்தில் மனிதர்கள் நிலவில் தங்கி ஆய்வு செய்வதற்கான முக்கியமான சோதனையாக இந்த பயணம் அமைந்தது.

விண்கலத்தின் பாதுகாப்பு வசதிகள் மற்றும் அவசர கால மீட்பு நடவடிக்கைகள் உள்ளிட்ட 5 முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு இந்த ஆய்வு வெற்றிகரமாக முடிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் விண்வெளி ஆராய்ச்சியில் புதிய யுகம் தொடங்கியுள்ளதாக நாசா அறிவித்துள்ளது.

## மீண்டும் முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி அமைந்ததும் செய்யாறு மாவட்டம் உருவாகும் அமைச்சர் எ.வ.வேலு உறுதி



**செய்யாறு, ஏப்.12:**
செய்யாறு சட்டமன்ற தொகுதியில் மதச்சார்பற்ற கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் ஒ.ஜோதியை ஆதரித்து தமிழக பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு நேற்று இரவு அனுப்பத்தூர் கூட்ரோடு, திருவத்தூர் மற்றும் பாராசூர் கூட்ரோடு பகுதியில் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குகளை சேகரித்து பேசுகையில், 'தமிழகத்தில் திருவண்ணாமலை மாவட்டம் உள்ளிட்ட 5 பெரிய மாவட்டங்கள் பிரிக்க கோப்புகள் தயார் நிலையில் உள்ளதால் முன்னுரிமை அடிப்படையில் செய்யாறு தலைமை இடமாகக் கொண்டு மாவட்டம் உருவாக்கப்படும்.

மேலும் திருவத்தூர் பகுதியில் செயல்பட்டு வந்த நகர ஆரம்ப சுகாதார நிலையம் நிச்சயம் ஓராண்டு காலத்திற்குள் கொண்டு வருவேன் என்ற உத்தரவாதத்தை தருகிறேன். திராவிட மாடல் அரசு தொடர்ந்திட கழக வேட்பாளர் ஜோதிக்கு உதயசூரியன் சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்' என பேசினார்.

இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் ஆர். வேல்முருகன், முன்னாள் எம்எல்ஏ அன்பழகன், நகர செயலாளர் விஸ்வநாதன், நகர மன்ற தலைவர் மோகனவேல், ஒன்றிய செயலாளர்கள் சங்கர், சீனிவாசன், தினகரன், ஞானவேல், திராவிட முருகன், ரவிக்குமார், தேர்தல் பணிக்குழு பொறுப்பாளர்கள் கோபு, செல்வபாண்டியன், ராஜீ, பார்வதி சீனிவாசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## "மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்காது" - குஷ்பு



**மதுரை, ஏப்.12:**
''இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாக உள்ள நான் சொல்கிறேன். தமிழகத்தில் மீண்டும் திமுக ஆட்சிக்கு வந்தால் பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இருக்காது," என்று திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் விவி.ராஜன் செல்லப்பாவை ஆதரித்து பேசிய தமிழக பாஜக துணைத் தலைவர் குஷ்பு தெரிவித்தார்.

திருப்பரங்குன்றம் அதிமுக வேட்பாளர் வி.வி.ராஜன் செல்லப்பாவை ஆதரித்து, குஷ்பு திருப்பரங்குன்றம் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சிந்தாமணி, மேல அனுப்பானடி உள்ளிட்ட பகுதிகளில் பிரச்சாரம் செய்தார். பொதுமக்கள், அதிமுகவினர், அதிமுக வேட்பாளர் ராஜன் செல்லப்பாவிற்கும், நடிகை குஷ்புவிற்கும் பூக்கள் தூவியும், ஆரத்தி எடுத்தும் உற்சாகமாக வரவேற்பு அளித்தனர்,

குஷ்பு பிரச்சாரத்தில் பேசியதாவது: கடந்த ஐந்து ஆண்டுகளாக மதுரைக்கு எந்த வேலைவாய்ப்பு, பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த திட்டங்களைக் கொண்டு வராத திமுகவினர் எந்த முகத்தை வைத்து மக்களிடம் ஓட்டு கேட்டு வருகிறார்கள். எய்ம்ஸ், நீட் தேர்வு, பெண் குழந்தைகள் பாதுகாப்பு, போதைப்பொருள் நடமாட்டம் தடுப்பு என கொடுத்த வாக்குறுதிகள் எதையும் நிறைவேற்றவில்லை. பெண் குழந்தைகள் நிம்மதியாக வெளியே போய்விட்டு வீட்டுக்கு திருப்பி வர முடிகிறதா? ஐந்து நிமிடங்கள் தாமதமானால் பெற்றோர்கள் மனதில் திக் திக் என்று அடிக்கிறது. நானும் இரண்டு பெண் குழந்தைகளுக்கு தாயாக இருக்கிறேன். அதனாலேயே இதைச் சொல்கிறேன்.

அந்த அளவுக்கு தமிழத்தில் சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு போய் உள்ளது. உலகில் மிகச் சிறந்த தலைவர் யார் என்று கேட்டால் மோடி என்கிறார்கள். கடைசி ஐந்தாவது இடத்தில் இருந்த இந்தியா உலக அரங்கில் முன்னனி பெற ஆரம்பித்துள்ளது.

மதுரையில் திமுகவினர் ஊழல் முறைகேட்டில் ஈடுபட்டு பதவிகளை இழந்துள்ளனர். போலீஸாரால் கைதும் செய்யப்பட்டுள்ளனர்.

தமிழக மக்களுக்கு பாதுகாப்பு வேண்டும் என்றால், நிம்மதி கிடைக்க வேண்டுமென்றால், பெண் குழந்தைகள் பாதுகாப்பாக இருக்க வேண்டுமென்றால் திமுக ஆட்சியை வீட்டிற்கு அனுப்ப வேண்டும். பாதுகாப்பை வழங்கி மக்கள் நிம்மதியாக வாழ அதிமுக ஆட்சிக்கு மீண்டும் வர வேண்டும்.

பஸ்ஸில் பெண்கள் இலவச பயணத்தை பார்த்து திமுக அமைச்சர் 'ஓசில தான் போறீங்க...' என கிண்டல் செய்கிறார்.

இன்னொரு அமைச்சர் பெண்களை இழிவாகப் பேசுகிறார். பெண்கள் என்றால் அவ்வளவு இழிவாகப் போச்சா உங்களுக்கு. பெண்களைப் பார்க்க அவ்வளவு கேவலமாக உள்ளதா? பெண்கள் ஆசைப்பட்டது சம உரிமை. பெண்கள் ஆசைப்பட்டது சம மரியாதை. பழனிசாமி பெண்களுக்கு மட்டுமில்லை, ஆண்களுக்கும் இலவச பயணம் என்றுகூறிவிட்டார். அதனால், இனி வீட்டில் ஆண்கள், பெண்கள் சேர்ந்து பஸ்சில் இலவசமாக பயணம் செய்யலாம். அதிமுகவுக்கு வாக்களித்தால் நிச்சயமாக மக்கள் வாழ்க்கை தரம் உயரம்.

இவ்வாறு அவர் பேசினார்.

## சென்னை தி.நகரில் பறக்கும்படை சோதனையில் ரூ.28 கோடி நகைகள் சிக்கியது



**சென்னை, ஏப்.12:**
தமிழகம் முழுவதும் சட்டமன்ற தேர்தலையொட்டி பறக்கும் படையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டு வருகிறார்கள்.

வாக்காளர்களுக்கு கொடுப்பதற்காக பணம் மற்றும் பரிசுப் பொருட்கள் வாகனங்களில் கடத்தி செல்லப்படுகிறதா என்பதை கண்டுபிடிப்பதற்காக இந்த சோதனை நடந்து வருகிறது. சென்னையிலும் பறக்கும் படை சோதனை சுழற்சி முறையில் 24 மணி நேரமும் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில்சென்னையில் நடைபெற்ற பறக்கும் படை சோதனையில் ரூ.28 கோடி மதிப்பிலான தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. சென்னை ஆயிரம் விளக்கு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட தி.நகர் நரசிம்மன் சாலையில் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டு இருந்தனர். அப்போது அந்த வழியாக வந்த காரை மடக்கி பறக்கும் படை அதிகாரிகள் போலீசாரின் துணையுடன் சோதனை மேற்கொண்டனர். இந்த சோதனையில் ரூ. 28 கோடியே 54 லட்சத்து 32 ஆயிரத்து 776 மதிப்புடைய தங்கம், வெள்ளி பொருட்கள் இருந்தது. அதற்கு பறக்கும் படை அதிகாரிகள் ஆவணங்களை காட்டுமாறு தெரிவித்தனர். ஆனால் இந்த நகைகளை எடுத்துச் சென்றவர்களிடம் உரிய ஆவணங்கள் எதுவும் இல்லை.

இதைத்தொடர்ந்து ரூ.28 கோடி மதிப்பிலான தங்கத்தை பறக்கும் படை அதிகாரிகள் அதிரடியாக பறிமுதல் செய்தனர். பின்னர் இந்த நகைகள் அனைத்தும் நுங்கம்பாக்கம் வருமான வரித்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டது. இது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையில் இந்த நகைகள் அனைத்தும் சென்னையில் உள்ள பிரபல நகை கடைக்கு மும்பையில் இருந்து கொண்டு வரப்பட்டது கண்டு பிடிக்கப்பட்டது. விமானம் மூலமாக கொண்டு வரப்பட்ட நகைகள் அங்கிருந்து வாகனங்களில் நகை கடைக்கு எடுத்துச் செல்லப்பட்டதும் தெரிய வந்தது.

## சென்னை போலீஸ் கமிஷனராக அபின் தினேஷ் மோடக் நியமனம்



**சென்னை, ஏப்.12:**
சென்னை போலீஸ் கமிஷனராக பணியாற்றிய அருண் மாற்றப்பட்டார். அவருக்கு பதிலாக புதிய கமிஷனராக அபின் தினேஷ் மோடக் நியமிக்கப்பட்டார். அவர் உடனடியாக பதவியேற்றுக்கொண்டார்.

இந்த நிலையில் நேற்று இரவு சென்னை போலீஸ் கமிஷனர் அருண் மாற்றப்பட்டார். அவருக்கு புதிய பதவி எதுவும் வழங்கப்படவில்லை. அவருக்கு பதிலாக, சென்னையின் புதிய போலீஸ் கமிஷனராக அபின் தினேஷ் மோடக் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் அமலாக்கத்துறை கூடுதல் டி.ஜி.பி.யாக பணியாற்றி வந்தார் மற்றும் தாம்பரம் போலீஸ் கமிஷனராக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

நேற்று இரவு 9 மணியளவில் அபின் தினேஷ் மோடக் சென்னை போலீஸ் கமிஷனர் அலுவலகத்துக்கு வந்து பதவியேற்றுக்கொண்டார்.

அபின் தினேஷ் மோடக் மராட்டிய மாநிலம் நாக்பூரை சேர்ந்தவர். மெக்கானிக் என்ஜினீயரிங் படித்த இவர், 1997-ம் ஆண்டு தமிழக காவல்துறையில் ஐ.பி.எஸ். அதிகாரியாக பணியில் சேர்ந்தார். தாம்பரம் கமிஷனராக பணியாற்றியபோது, இவர் நேர்மையாக பணியாற்றியவர் என்ற பாராட்டை பெற்றுள்ளார்.

புதிய போலீஸ் கமிஷனர் அபின் தினேஷ் மோடக்கிற்கு மனைவியும், ஒரு மகள், மகன் உள்ளனர். இவரது மகள் டென்னிஸ் விளையாட்டு வீராங்கனையாக உள்ளார். மகன் பிளஸ்-2 படிக்கிறார். இவரது சகோதரர் மராட்டிய மாநிலத்தில் ஐ.பி.எஸ். அதிகாரியாக உள்ளார்.

## நடிகர் விஜயின் ஜனநாயகன் படத்தில் இஸ்லாமியர்களை தவறாக சித்தரித்து காட்சிகள்: இஸ்லாமிய அமைப்புகளின் கண்டனங்கள் குவிகிறது



**சென்னை, ஏப்.12:**
நடிகர் விஜயின் ஜனநாயகன் படத்தில் இஸ்லாமியர்களை தவறாக சித்தரித்து காட்சிகள் இடம் பெற்றுள்ளதை கண்டித்து இஸ்லாமிய அமைப்புகளின் கண்டனங்கள் குவிய தொடங்கியுள்ளது. நடிகர் விஜய் நடித்துள்ள ஜனநாயகன்' திரைப்படம் பொங்கல் பண்டிகையையொட்டி திரையரங்குகளில் வெளியாகும் என அறிவிக்கப்பட்டது.

ஆனால், சென்சார் சான்றிதழ் பிரச்சனையால் படம் வெளியாகவில்லை. இந்நிலையில் தேர்தலுக்கு பின் படம் திரையரங்குகளில் வெளியாகும் என கூறப்பட்டது. இதனிடையே நேற்று ஜனநாயகன் படம் இணைய தளங்களில் கசிந்தது. இதனால் படக்குழுவினர் அதிர்ச்சி அடைந்தனர். இதனை செய்தது தவெகவினர் தான் என்று சினிமா வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்பட்டு வருகிறது. சட்ட விரோதமாக படம் வெளியான நிலையில், திரைத்துறையினர் பலரும் இதற்கு கண்டனம் தெரிவித்துள்ளனர். மேலும் இது தொடர்பாக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என தயாரிப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது. ஜனநாயகன் படக்காட்சிகளை யாரும் சமூக வலைதளங்களில் பகிர வேண்டாம் என படக்குழு கேட்டுக்கொண்டுள்ளது.

ஜனநாயகன் படத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான காட்சிகள் இருப்பதாகவும், இஸ்லாமியர்களை தீவிரவாதிகளை சித்தரிப்பதாகவும் பலரும் சமூக வலைதளங்களில் கருத்து தெரிவித்து வருகின்றனர். வெடிகுண்டு வைக்கும் கதாபாத்திரத்திற்கு இஸ்லாமிய தோற்றமும், அந்த நபரை 'பாய்' என அழைக்கும் வசனமும் இடம் பெற்றுள்ளதாக கூறப்படுகிறது.

இந்நிலையில் இயக்குநர் அமீர் தனது வாட்ஸ் அப்பில் பதிவிட்டுள்ள ஸ்டேடஸில் "கசிந்திருக்கும் ஜனநாயகன் படக்காட்சியிலும் இஸ்லாமியர்கள் தான் தீவிரவாதிகளா? இது தான் தங்களின் அரசியலா? எப்போது தான் மாறும் இந்த மனநிலை" எனக் கேள்வி எழுப்பி பதிவிட்டுள்ளார். முன்னதாக விஜய் நடிப்பில் வெளியான 'துப்பாக்கி' திரைப்படத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான வெறுப்பு பிரசாரம் இடம்பெற்றிருந்ததாக கூறி இஸ்லாமிய அமைப்புகள் போராட்டம் நடத்தின. அதைத்தொடர்ந்து 'பீஸ்ட்' படத்தில் இஸ்லாமியர்களை தீவிரவாதிகளாக காட்சிப் படுத்தியிருந்ததற்கு கண்டனங்கள் எழுந்தன. தற்போது விஜய் அரசியல் களத்திற்கு வந்துள்ள நிலையில்,'ஜனநாயகன்' படத்திலும் அப்படியான காட்சி இடம்பெற்றிருப்பதாக கூறப்படுவது சலசலப்பை ஏற்படுத்தியுள்ளது. விஜயின் இந்த படத்திற்கு பல்வேறு இஸ்லாமிய அமைப்புகள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றன.

## குடியாத்தம் பகுதியில் ஆதார்கார்டு, பான்கார்டு பயன்படுத்தி ரூ.3 கோடி மோசடி வேலூர் எஸ்பி அலுவலகத்தில் புகார்

**வேலூர், ஏப்.12:**
ஆதார் கார்டு, பான்கார்டு பயன்படுத்தி ரூ.3 கோடி மோசடி செய்தவர்கள் மீது நடவடிக்கை எடுக்கும்படி வேலூர் எஸ்பி அலுவலகத்தில் நேற்று ஒருவர் புகார் அளித்தார். வேலூர் மாவட்டம் குடியாத்தம் பகுதியை சேர்ந்த ஒருவர் நேற்று எஸ்பி அலுவலகத்தில் அளித்த புகார் மனுவில் கூறியிருப்பதாவது: எனது ஆதார் மற்றும் பான்கார்டை பயன்படுத்தி மர்மநபர்கள் கடந்த 2022ம் ஆண்டு மார்ச் மாதம் ஜிஎஸ்டி பதிவெண் உருவாக்கியுள்ளனர். பின்னர் அதே ஆண்டு ஜூன் மாதம் வர்த்தகத்தை முடித்து வைத்துள்ளதாக ஆவணங்களில் தெரியவருகிறது. எனது ஆதார் மற்றும் பான் பதிவெண்ணை பயன்படுத்தி, நான் ஏதும் ஜிஎஸ்டி பதிவெண் உருவாக்கவில்லை. எனது ஆவணங்களை பயன்படுத்தி ரூ.3 கோடி வரை ஜிஎஸ்டி மோசடி செய்துள்ளனர். எனவே எனது ஆவணங்களை தவறாக பயன்படுத்திய மர்ம நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கவேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது. மனுவை பெற்று விசாரித்த போலீசார், இதன் மீது நடவடிக்கை எடுக்க குடியாத்தம் போலீசாருக்கு அறிவுறுத்தி உள்ளனர்.

## நமது ஒரே இலக்கு மு.க.ஸ்டாலினை 2வது முறையாக முதலமைச்சராக அமர வைக்க வேண்டும்: ஓ.பன்னீர்செல்வம்



**சென்னை, ஏப்.12:**
நமது ஒரே இலக்கு மு.க. ஸ்டாலினை 2வது முறையாக முதலமைச்சராக அமர வைக்க வேண்டும் என ஓ.பன்னீர் செல்வம் தெரிவித்துள்ளார்.

மேலும் '5 ஆண்டு காலம் சிறப்பான ஆட்சியையும் உழைப்பையும் தந்து கொண்டிருப்பவர் முதலமைச்சர் ஸ்டாலின்' எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## WANTED
வீட்டு வேலை செய்ய குழந்தை நோயாளி,நர்ஸ் வேலைக்கு ஆட்கள் தேவைப்படுவர்/வேலை தேடுபவரும் அனுகவும். 8668107106

## ADVERTISE WITH US
CONTACT US 9438610756

## WANTED: FEMALE ANCHORS
- Age 18 to 35
- Good Looking
- Work from Home (Full-time/Part-time)

Salary: Rs. 20,000 to 50,000
Call / Whatsapp:
7789941009
9337501889

## ! WANTED !
Muslim Lady Accounts Assistant
Qualification: B.Com / Tally Knowledge Required
Company: Perfume Manufacturing Company
Location: Chrompet
Contact: 99401 46318

## WANTED
IMMEDIATE OPENINGS AVAILABLE!
- HOUSEKEEPING STAFF (Male & Female)
- MARKETING EXECUTIVE – ELECTRICAL FIELD (Male & Female)
- ELECTRICIAN & HELPERS (Weekly / Monthly Wages)
- ELECTRICAL SUB-CONTRACTOR
- DRIVER

GOOD SALARY | FLEXIBLE WORK OPTIONS | IMMEDIATE JOINING
CONTACT NOW: 9363133253
HURRY! LIMITED VACANCIES AVAILABLE!

## Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com

## keerthi foundation
De Addiction Cum Rehabilitation Centre
INTERNSHIP & JOB OPPORTUNITIES
MSW & M.Sc Psychology – Freshers

Internship:
- Clinical Training
- Counseling Practice
- Case Work

Jobs:
- Social Worker
- Jr Psychologist
- Rehab Counselor

Build Your Career in De-Addiction & Mental Health Care
Call: 9841945060 | 7845027710
www.keerthifoundation.com

## WANTED
ஆட்கள் தேவை
சமையல் | வீட்டுவேலை | குழந்தை | நோயாளி
தங்கி | தங்காமல்
சென்னையில் தங்கி / தங்காமல் வேலை செய்யலாம்
தொடர்புக்கு 8148215778 8248610592
A trustworthy help service for Chennai families

## GREEN HOUSING & PROPERTIES
மண்ணும் பொன்னும் சிறுசேமிப்பு திட்டம் 50 - 50 EMI
OFFER PRICE ரூபாய் ₹ 1.80 லட்சம்
800 SQFT
FREE FREE!!! 10 கிராம் GOLD COIN சேமியுங்கள்
VILLA PLOTS FOR SALE
BOOK NOW
+91 77083 95118

## திருப்பூர் ரியல் எஸ்டேட் விற்பனை
சிறந்த முதலீட்டு வாய்ப்பு
PREMIUM PLOT SALE
Tiruvallur to Oothukottai Highway NH on Rd Site
VGP THIRU NAGAR, PHASE-1
- Location: (Nr Mylapore Jn)
- Direction: N/ Face
- Total Area: 2400 sft
- Price: RS.650/sft

LIMITED PLOTS AVAILABLE
Contact Us: 9445315510 / 9283257193
VGP Developers - Your Trusted Partner

## குன்னத்தோழம்
உடனடி வேலைவாய்ப்பு
WANTED
டெல்டா டைமண்ட் டூல்ஸ்
சென்னை - குன்றத்தூர்
உதவியாளர் (HELPER): அடிப்படை அறிவு, உடல் தகுதி, அனுபவம் தேவையில்லை
டர்னர் (TURNER): டர்னர் தொழில்முறை அனுபவம் தேவை, வரைபடங்கள் படித்தல்
தகுதி: 10வது / ITI (FITTER/TURNER)
வயது வரம்பு: 18-35
சம்பளம்: நல்ல ஊதியம் + கூடுதல் நன்மைகள்
தெளிவுக்கு வரவேண்
தொடர்புக்கு / For Details:
pH: 9841738379

## just499 MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary | Unilevel | Matrix | Board | Generation | ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com

## Sri Manjal Mart
தரமான ஆன்மீக பூஜை பொருட்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
20% OFF
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com

## SADHANA DEVI.K
CAR WASH SUPREME
Car Wash & Detailing
- Car Foam Pressure Wash
- Teflon Coating
- Ceramic Wax Treatment
- Under Chassis Painting
- Interior Foam Wash / Stain Remover
- Paint Correction / Protection

We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai - 600 081.

## WANTED
M/F லோடுமேன்,பிக்கர், டிரைவர், வர/மாத சம்பளம்: 450-700. உணவு இடம் free day/N8 shift
7540003588

## அருள்தரும் தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..
www.arultharumdeivam.com

## WANTED
Retd, VRS, Home Makers, NRIs, Business Person
Contact
8248951872

## கவிதை அரங்கம்!



உன் ஒரு பார்வைக்காக,
நான் பல மணிநேரம்
காத்திருக்கத் துணிந்தேன்.

புன்னகை எனும்
ஆயுதத்தால், என் இதயக்
கோட்டையைத் தகர்த்தாய்.

நிலவுக்குத் தெரியாது,
அவளை விட அழகாய்
ஒருத்தி இங்கே

இருக்கிறாளென்று.

உன் கொலுசுச் சத்தம்,
என் தூக்கத்தைக்
கலைக்கும் தேவாமிர்தம்.

கருப்பு நிறம் கூட
அழகானது, அது
உன் விழித்திரையில்
இருக்கும்போது!

## வாழ்க்கை தத்துவம்...



அடுத்த நிமிடம் நிச்சயம்
இல்லாத வாழ்க்கை முடிஞ்சு
வரைக்கும் எல்லாரையும்
சந்தோஷ படுத்துவோம்

உனக்காக தான்
வாழ்கிறேன் என்பவர்கள்
உன்னை யார் என
கேட்கவும் தயங்காதவர்கள்

எப்போதும் உன்
அடையாளத்தை
யாருக்காகவும்
விட்டுக் கொடுக்காதே

## பாட்டி சுட்ட வடை

அந்தப் பூங்காவுக்கு வெளியே அதிகக் கூட்டம்.

நடுவில் அமர்ந்திருந்தார் அம்புஜம் பாட்டி. எனக்கு இரண்டு..எனக்கு மூணு என்று சிலர் குரல் கொடுக்க அவர்கள் கைகளில் இலையில் சுற்றி கொடுத்தார். அவர்கள் காசை கொடுத்துவிட்டு பார்சலை வாங்கியபடி பூங்கா எதிரே உள்ள மரத்தின் கீழ் அமர்ந்தனர்.பார்சலைப் பிரித்தனர். மணத்தது மசால்வடைகள்.தேங்காய் சட்டினியைத் தொட்டு மசால் வடையைச் சாப்பிட்டனர்.ஆ..ஹா..என்ன ருசி என்று புகழ்ந்தனர்.தண்ணீர் குடித்தனர். இலையை எடுத்து குப்பைத் தொட்டியில் அவர்கள் போட்டுக்கொண்டிருந்த போது போலீஸ் ஜீப் வேகமாக அங்கு வந்தது.இன்ஸ்பெக்டர் மற்றும் போலீசார் ஜீப்பிலிருந்து இறங்கினர். இதையடுத்து ஹெல்த் இன்ஸ்பெக்டர் மற்றும் அலுவலர்கள் ஒரு காரில் வந்து இறங்கினார்கள்.

அங்கு வடை சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள் பதட்டத்துடன் பார்க்க,இன்ஸ்பெக்டர் அவர்களைப் பார்த்து போங்க..போங்க..என்று அதட்ட கூடியிருந்த கூட்டத்தினர் கலைந்து சென்றனர்.

அம்புஜம் பாட்டி அங்கே தனியாக வடை சுட்டுக்கொண்டிருந்தார்.போலீசார்கள் ஏன் வருகிறார்கள் என்று அவர் கண்கள் மேல் கைவைத்து கூர்ந்துப் பார்த்தார். ஹெல்த் இன்ஸ்பெக்டர் வேகமாக பாட்டியை நோக்கி வந்தார்." ஏ..பாட்டி உங்கமேல கம்பளைண்டு வந்திருக்கு.. நீங்க பழைய எண்ணையிலே வடை சுட்டுக் கொடுக்கியளாம்.வடையைச் சாப்பிட்டுட்டு அங்கங்கே இலையைப் போட்டுட்டுப் போயிடுறாங்களாம். கொசுகள் ,பன்றிகள் வந்து இந்த இடத்தில் சுகாதார சீர்கேடு ஏற்படுதாம். பூங்காவுக்கு வருகிறவங்களுக்கு ரொம்பத் தொந்தரவாக இருக்குதாம்.." என்று சொல்ல ,பாட்டி வடை சுடுவதை நிறுத்திவிட்டு எழுந்து நின்றார். "அய்யா,நான் பத்துவருஷமா இங்கே வடைசுட்டு வித்துக்கிட்டு இருக்கேன். நல்ல எண்ணைதான். பயன்படுத்தி வடை சுடுறேன்..யாருக்கும் எந்தப் பாதிப்பும் வந்ததில்லை. இலையை எல்லோரும் குப்பைத் தொட்டியில் போடுறாங்க.. எந்த சுகாதார கேடும் ஏற்படட்தில்லை." என்று சொல்லிய போது ,ஹெல்த் இன்ஸ்பெக்டர் வேகமாக, " பாட்டி.. கம்பளைண்ட் வந்திருக்கு..நீங்க வடைசுட பயன்படுத்துறது நல்ல எண்ணையா.. இல்லையா என்று நாங்க பரிசோதித்துச் சொல்லுறோம். இனி எங்கேயும் நீங்க ரோட்டோரத்தில வடைசுட்டு விற்கக் கூடாது. பப்ளிக்குக்கு பாதிப்பு ஏற்படும்." என்று உரத்தக்குரலில் சொன்னார். பாட்டியோ,: அய்யா..எனக்கு எண்பது வயசாயிட்டுய்யா.. இந்த வடைவிற்று ஏதோப் பிழைச்சிட்டு இருக்கேன்..இதைச் செய்யக் கூடாதுன்னா நான் என்ன பண்ணுவேன்" என்று கண்ணீர் ததும்ப நின்றார்.இதைப்பார்த்த ஒருவர் ஹெல்த் இன்ஸ்பெக்டரிடம்," சார்.. அந்தப்பாட்டி ரொம்ப நாளா இங்கேதான் வடை விக்கிது..அவங்களை ஏன் வடை விக்கக் கூடாதுன்னு சொல்லுறீங்க... அவங்க சுட்ட வடையாலே பலருக்கு பசிஅடங்கியிருக்கு..யாருக்கும் பாதிப்பு ஏற்பட்டதில்லை..அதனால அவங்க இங்கே வடைவிக்கட்டும் என்று சொல்ல,அவருக்கு ஆதரவாக இரண்டு பேர் வந்தனர்." நாட்டிலே எங்கேயெல்லாமோ சுகாதாரக் கேடு நடக்கு..அங்கெல்லாம் போகமாக.. இந்தப் பாட்டிக்கிட்டு வந்து உங்க அதிகாரத்தை காட்டுறீங்க" என்று ஆவேசமாகக் கேட்க,போலீஸ் இன்ஸ்பெக்டர் சூடானார்." ஏங்க அரசு பணி செய்யவிடாம தடுக்காதீங்க..போங்க.. போங்க.." என்று அவர்கள் முதுகைப் பிடித்துத் தள்ள,அவர்கள் எதிர்ப்புக்குரல் கொடுத்தனர்.இன்ஸ்பெக்டர் கோபம் அடைந்தார்." கான்ஸ்டபிள் அந்தப் பாட்டியைபிடிச்சி ஜீப்பிலே ஏத்துங்க.. எதுத்துக்குரல் கொடுக்கிறவங்களைப் பிடிச்சி அப்புறப்படுத்துங்க" என்று கத்தினார்.

போலீசார் பாய்ந்து அம்புஜம்பாட்டியை ஜீப்புக்கு கொண்டு செல்ல முயன்றபோது பொது மக்கள் திரண்டுவந்து தடுத்தனர். ஆத்திரம் அடைந்த போலீசார் அவர்கள் மீது தடியடி நடத்தி விரட்டினர்.பாட்டியை இழுத்துச் சென்று ஜீப்பில் ஏற்றினர். பாட்டி வடைசுட வைத்திருந்த எண்ணை பாட்டிலை ஹெல்த் இன்ஸ்பெக்டர் கைப்பற்றியவாறு ஊழியர்களுடன் காரில் ஏறினார்.

பாட்டி வடைசுட வைத்திருந்த எண்ணை பாட்டிலை ஹெல்த் இன்ஸ்பெக்டர் கைப்பற்றியவாறு ஊழியர்களுடன் காரில் ஏறினார்.

அம்புஜம் பாட்டியின் வடைசுடும் சட்டி மற்றும் பாத்திரங்கள் ,அடுப்பு,ஆகியவை போலீசாரின் தடியடிக்கு இரையாகி சிதறிக்கிடந்தன.

போலீஸ் நிலையம் வந்ததும் அம்புஜம் பாட்டியை இன்ஸ்பெக்டர் எச்சரித்தார்." இனி எங்கேயும் வடைச் சுட்டு விக்கிறதைக் கண்டன் தொலைச்சிடுவேன் தொலைச்சி.. கான்ஸ்டபிள்..இந்தப் பாட்டிக்கிட்டு எழுதிவாங்கிட்டு அனுப்பிவை" என்று சொல்லிவிட்டு வேகமாக ஜீப்பில் ஏறி வெளியேச் சென்றார்.

அம்புஜம் பாட்டிக்கு அழுகை அழுகையாக வந்தது.இனி வடைசுட்டு விற்கமாட்டேன் என்று எழுதப்பட்ட தாளில் கைரேகையைப் பதித்துவிட்டு போலீஸ்நிலையத்தை விட்டு வெளியே வந்தார்.பொடி நடையா நடந்து வந்த அவர் தனது ஓலை குடிசைக்குள் குனிந்து உள்ளே சென்றார்.பழைய எண்ணையிலே வடைசுடுறோமுன்னு யாரு கம்பளைண்டு பண்ணியிருப்பா என்று யோசித்தபடி உட்கார்ந்திருந்தார். ஒரு வாரம் ஓடியது.போலீஸ் இன்ஸ்பெக்டர் வீட்டில் இருந்தார். செல்போன் அதிகாலையில் அலறியது.கான்ஸ்டபிள் பேசினார்." அய்யா! அரசு ஆஸ்பத்திரியிலே புட் பாய்சன் என்று சொல்லி பத்துபேர் அட்மிட் ஆயிருக்காங்க.அவங்க மயக்கமா இருக்காங்க.அதனால அவங்க என்ன சாப்பிட்டாங்க,எது சாப்பிட்டாங்க என்று சரியாத் தெரியல.அவங்க மயக்கம் தெளிஞ்சாதான் உண்மை தெரியும்" என்று சொல்ல,இன்ஸ்பெக்டர் அவரிடம்," யாரும் சீரிசா இருக்காங்களா " என்று கேட்டார்.அதற்கு அந்த போலீஸ்காரர்," ஆமாய்யா..மூன்று பேரு சீரிசா இருக்காங்க..பெயர்விவரம் தெரியல.. கூலி வேலை செஞ்சிட்டு பிளாட்பாரத்திலே படுத்து தூங்கிறவங்களாம்.பாத்தவங்க சொல்லுறாங்க" என்க,இன்ஸ்பெக்டர்," சரி.. நான் உடனே ஆஸ்பிட்டலுக்கு வர்ரேன்.." என்றவாறு தலையில் தொப்பியை மாட்டிக் கொண்டு ஜீப்பில் ஏறி விரைந்தார்.மயங்கிய நிலையில் சிகிச்சை பெறுகின்றவர்களைப் பார்த்தார்.அவர்களுக்கு மயக்கம் தெளிய ஒரு மணி நேரம் ஆகும் .நைட்டு எதோ தோசை சாப்பிட்டு இருப்பாங்க போலிருக்கு.தெருவோர கடையிலே சாப்பிட்டாங்களோ என்னமோ தெரியல.. அது பாய்சனாயிருக்கு" என்று டாக்டர் சொன்னதும் இன்ஸ்பெக்டருக்கு அம்புஜம் பாட்டி நினைவு வந்தது." என்ன.அந்தப் பாட்டியை வடை விக்கக்கூடாதுன்னு சொன்னதால,தோசைச் சுட்டு தெரியாம வித்திருக்குமோ.கண்ட எண்ணையையும் ஊற்றி தோசை சுட்டதால..தோசை பாய்சனாயிட்டா.." என்று நினைத்தார்." அந்த அம்புஜம் பாட்டி வீடு எங்கேய்யா" என்று போலீஸ்காரரிடம் இன்ஸ்பெக்டர் கேட்க,அந்த போலீஸ்காரர், " அய்யா,ஆத்தோரத்திலே அந்தப் பாட்டி வீடு இருக்கு" என்று சொன்னவுடன்" அப்படியா.. ஜீப்பிலே ஏறு..அந்தப் பாட்டி என்ன செய்யுதுன்னுப் பாத்துட்டு வந்திடுவோம்" என்று இன்ஸ்பெக்டர் சொல்ல,ஜீப் ஆத்தங்கரை யோரத்தில் உள்ள பாட்டி வீட்டை நோக்கி விரைந்தது." இதுதான் அந்தப் பாட்டி வீடு" என்று கான்ஸ்டபிள் சொன்னதும் அந்த ஓலை குடிசை வீட்டு முன் ஜீப் நின்றது.இன்ஸ்பெக்டர் ஜீப்பைவிட்டு இறங்கி அந்த குடிசைவீட்டை நோக்கி விரைந்தார்.வீடு பூட்டிக்கிடந்தது." என்ன ..தோசை வித்தப் பாட்டி பத்து பேரு மயங்கி விழுந்திட்டாங்கன்னவுடன் தலை மறைவாகிட்ட.." என்றபடி அங்கும் இங்கும் பார்த்தார்.அந்த வழியாக வந்த முதியவரிடம்," வடைசுட்டு விக்குமோ இந்தப் பாட்டி எங்கே? என்று கேட்க,அவர் " அந்தப் பாட்டியா..அதோ அந்த வயக்காட்டுப் பக்கம் போனாலும் போயிருக்கும். போயிப் பாருங்க" என்று சொன்னார். உடனே இன்ஸ்பெக்டர்," ம்..பாக்கிறேன்" என்றவாறு ஜீப்பில் ஏறினார்.ஜீப் விரைந்தது. வயக்காட்டில் பெண்கள் நிரம்பி இருந்தனர். அவர்கள் நடுவில்

அம்புஜம் பாட்டி குனிந்து களை பறித்துக்கொண்டிருந்தார். போலீஸ் காரராகளைக்கண்டதும்,பெண்கள் பதட்டத்துடன் நிமிர்ந்துப்பார்க்க, " அந்த வடைசுடும் பாட்டியை வரச் சொல்லுங்க" என்று அவர்களிடம் இன்ஸ்பெக்டர் சொல்ல,குனிந்து களைபறித்துக் கொண்டிருந்த அம்புஜம் பாட்டியிடம் பெண்கள்," இன்ஸ்பெக்டர் கூப்பிடுகிறார்.. போங்க" என்றனர்.அவர் களை பறித்த கையுடன்," என்ன இன்ஸ்பெக்டர் கூப்பிடுகிறாரா..எதுக்கு என்றபடி எழுந்து வயல் பகுதியிலிருந்து நடந்து வந்தார். அப்போது இன்ஸ்பெக்டர் செல்போன் ஒலித்தது.கான்ஸ்டபிள் பேசினார்." அய்யா,ஆஸ்பத்திரியிலே மயக்கமா இருந்தவங்க கண்முழிச்சிட்டாங்க..அவங்க பூங்கா அருகில் உள்ள ஓட்டலில் இரவு தோசை சாப்பிட்டாங்களாம்.சாம்பாரிலே ஏதோ பல்லி செத்துக் கிடந்திருக்கு.. அதுதான் பாய்சன் ஆயிட்டு..ஹெல்த் இன்ஸ்பெக்டர் மற்றும் அதிகாரிகள் அந்த ஓட்டலுக்குப் போயி சோதனை நடத்திக்கிட்டு இருக்காங்கய்யா" என்று சொல்லியதும் இன்ஸ்பெக்டருக்கு தலை சுற்றியது.செல்போன் இணைப்பை துண்டித்துவிட்டு நிமிர்ந்துப் பார்த்தார். அங்கே பாட்டி அம்புஜம் நின்று கொண்டிருந்தார்." என்ன ராசா.. என்னை தேடி வந்திருக்க" என்று பாட்டி கேட்க,அவரை நோக்கி இன்ஸ்பெக்டர் சலியூட்டு அடித்தார்.பாட்டிக்கு ஒன்றும் புரியவில்லை.

**கோ.சுரேஷ்குமார்**
கோவில்பட்டி

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*ஆசிரியர்: டேய், "ஆல்பாபெட்" (Alphabet)-ல மொத்தம் எத்தனை எழுத்து?*
*மாணவன்: எட்டு எழுத்து சார்! (A-L-P-H-A-B-E-T)*



*ஆசிரியர்: ஒரு கிலோ இரும்பும், ஒரு கிலோ பஞ்சும் மேல இருந்து போட்டா எது முதல்ல கீழ விழும்?*

*மாணவன்: உங்க தலைதான் சார்... ஏன்னா அதை அங்க நின்னு பாத்துட்டு இருப்பீங்கல்ல!*

## தினம் ஒரு சமையல்



### பிடி கருணை கிழங்கு அல்வா

**தேவையான பொருட்கள்:**

3பிடி கருணை கிழங்கு
ஒன்றுவெங்காயம்
1தக்காளி
கருவேப்பிலை மல்லி
கால் தேக்கரண்டிமஞ்சள் தூள்
இரண்டு தேக்கரண்டிகுழம்பு மிளகாய் தூள்
எலுமிச்சை அளவுபுளி
தேவைஉப்பு
தேவைக்கேற்பஎண்ணெய்

**செய்முறை:**

பிடி கருணை கிழங்கை தோல் சீவி சிறிது தண்ணீர் ஊற்றி உப்பு மஞ்சள்தூள் சேர்த்து வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்



பின் வாணலியில் 4 தேக்கரண்டி எண்ணெய் ஊற்றி வெங்காயம் தக்காளி கருவேப்பிலை சேர்த்து வதக்கி பின் மசித்த கிழங்கை சேர்த்து வதக்கி மிளகாய்த்தூள் சேர்த்து நன்கு வதக்கவும்

அதில் ஊற வைத்த புளியை கரைத்து அதையும் ஊற்றி நன்கு வதக்கவும்

15 நிமிடம் மிதமான தீயில் அடிப்பிடிக்காமல் அல்வா பதத்திற்கு சுருளும் வரை வதக்கவும் பின் அதிலிருந்து எண்ணெய் வெளி வந்த பிறகு அடுப்பை அணைக்கவும்

விருது புளிப்பான கொஞ்சம் காரமான பிடி கருணை கிழங்கு அல்வா தயார்.

## அதிவிடயம் பயன்கள்



அதிவிடயம் என்பது காய்ச்சல், வயிற்றுப்போக்கு, செரிமானக் கோளாறுகள் மற்றும் சளி போன்ற நோய்களைக் குணப்படுத்தப் பயன்படும் ஒரு சக்திவாய்ந்த சித்த மருத்துவ மூலிகை ஆகும். இது வயிற்று வலி, காய்ச்சல், மற்றும் குழந்தைகளின் இருமல், வாந்திக்குச் சிறந்த நிவாரணியாகச் செயல்படுகிறது.

அதிவிடயத்தின் முக்கிய பயன்கள்:

காய்ச்சல் மற்றும் சளி: இது சுரம் (காய்ச்சல்) மற்றும் சளியை குணப்படுத்த பயன்படுகிறது.

வயிற்றுப் கோளாறுகள்: வயிற்றுப்போக்கு (அதிசாரம்), அஜீரணம், வயிற்று வலி மற்றும் பசியின்மைக்கு இது ஒரு சிறந்த மருந்தாகும்.

மூல நோய்: சித்த மருத்துவத்தில், அதிவிடயப் பொடி தேனுடன் சேர்த்து மூல நோய்க்கு மருந்தாகப் பரிந்துரைக்கப்படுகிறது.

குழந்தைகளுக்கான மருந்து: குழந்தைகளுக்கு ஏற்படும் இருமல், சளி, வாந்தி, வயிற்று வலி ஆகியவற்றிற்கு இது வழங்கப்படுகிறது.

உடல் நலம்: இது உடலின் நச்சுத்தன்மையைக் குறைத்து, நரம்பு மண்டலத்தை வலுப்படுத்த உதவுகிறது.

வீக்கம் மற்றும் காயம்: வீக்கங்களைக் குறைக்கவும், காயங்களை குணப்படுத்தவும் இது உதவுகிறது.


இரத்தப்போக்கு: இரத்தப்போக்கு தொடர்பான கோளாறுகளுக்கு இது சிகிச்சையளிக்கப் பயன்படுகிறது.

பயன்படுத்தும் முறை:

பொதுவாக, அதிவிடய வேர்ப்பொடி தேனுடன் கலந்து அல்லது கஷாயமாகக் (குடிநீர்) காய்ச்சி குடிக்கப்படுகிறது.

குறிப்பு: அதிக அளவில் எடுத்துக்கொள்வது பக்கவிளைவுகளை ஏற்படுத்தலாம். எனவே, சித்த மருத்துவர் ஆலோசனைப்படி பயன்படுத்துவது சிறந்தது.

## ரூ. 10 கோடி செலவு, ரூ. 100 கோடி சம்பாதித்த நடிகை மீனா... எப்படி தெரியுமா?



தமிழ் சினிமாவில் ரஜினி, கமல்ஹாசன், விஜயகாந்த், சத்யராஜ், சரத்குமார், அஜித்குமார் என முன்னணி நடிகர்களுடன் இணைந்து நடித்து பல வெற்றிப் படங்களை கொடுத்தவர் தான் நடிகை மீனா.

தமிழை தாண்டி தெலுங்கு, மலையாளம் போன்ற மொழிகளிலும் நிறைய ஹிட் படங்கள் கொடுத்துள்ளார். இப்போது மலையாளத்தில் செம ஹிட் படமான த்ரிஷ்யம் 3 படத்தில் நடித்து முடித்துள்ளார், விரைவில் படமும் வெளியாக இருக்கிறது.

படங்கள், போட்டோ ஷூட், சுற்றுலா என தனது வாழ்க்கையை கழித்து வருகிறார்.

இந்த நிலையில் நடிகை மீனாவின் ஸ்மாட் பிசினஸ் பற்றிய தகவல் தான் சமூக வலைதளங்களில் வலம் வருகிறது.

20 ஆண்டுகளுக்கு முன்பு அப்போது பெரிய தொகையாக கருதப்பட்ட ரூ. 10 கோடியை வங்கியில் கடன் வாங்கி தமிழ்நாட்டில் பாரம்பரிய பங்களா ஒன்றை கட்டியுள்ளார்.

பாரம்பரிய கட்டிடக்கலை, மரத் தூண்கள், நடுமுற்றம் என பழமையான கலை நயத்துடன் அந்த வீடு அமைந்திருந்தது.

தற்போது மீனாவின் வீட்டின் அழகில் மயங்கிய அமெரிக்காவை சேர்ந்தவர்கள் சுமார் ரூ. 100 கோடி கொடுத்து மீனாவின் வீட்டை வாங்கியிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## சினிமா



சம்யுக்தா செம ஹாட் ஆன உடையில் கவர்ச்சி போஸ் கொடுத்து போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அந்த புகைப்படங்கள் தற்போது ரசிகர்களை கவர்ந்து இணையத்தில் வைரல் ஆகி இருக்கிறது.

## அட நடிகர் சந்தானம் மகனா இவர், நன்றாக வளர்ந்துவிட்டாரே.... அடுத்த ஹீரோவா, போட்டோ இதோ


சின்னத்திரையில் இருந்து வெள்ளித்திரைக்கு வந்து மாபெரும் உச்சத்தை தொட்ட நடிகர் என்றால் அது சந்தானம் தான்.

காமெடியனாக சந்தானம் நடித்த காலத்தில் அவர் இல்லாத படமே இல்லை என்றளவிற்கு எல்லா படங்களிலும் நடித்து வந்தார். பெரிய ஹீரோ படமோ, சின்ன படமோ எல்லா படத்திலும் தனது 100% உழைப்பை போட்டு நடித்து வந்தார்.

காமெடி நடிகராக கலக்கி வந்தவர் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் படத்தின் மூலம் நாயகனாக என்ட்ரி கொடுத்தார். ஹீரோவாக அடுத்தடுத்து படங்கள் நடிக்கும் சந்தானம் தற்போது Santa 20 படத்தின் படப்பிடிப்பில் பிஸியாக உள்ளார்.

46 வயதாகும் நடிகர் சந்தானம் கடந்த 2004ம் ஆண்டு உஷா என்பவரை திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்கு ஒரு மகன் மற்றும் மகள் உள்ளனர்.

சந்தானத்தின் குடும்ப புகைப்படங்கள் அவ்வளவாக



வெளியானது கிடையாது, அவரது மகன் நிபுன் புகைப்படங்கள் மட்டும் சில வெளியாகி இருந்தது. இந்த நிலையில் நடிகர் சந்தானத்தின் மகன் நிபுனின் லேட்டஸ்ட் புகைப்படம் வெளியாகியுள்ளது.

சந்தானத்தை விட உயரமாக ஹீரோவாக ரேஞ்சிற்கு வளர்ந்திருக்கும் அவரை பார்த்த ரசிகர்கள் அடுத்த ஹீரோவா என கமெண்ட் செய்து வருகிறார்கள்.

# அதிசய ஆலயங்கள்...

திருவண்ணாமலை சுவாமி எப்போதுமே ராஜகோபுரம் வழியாக வராமல் பக்கத்து வாசல் வழியாகத்தான் வெளியே வருவார்.

மதுரை மீனாட்சியம்மன் கோவிலில் மொத்தம் 14 கோபுரங்கள் உள்ளன. வேறு எந்த கோவிலிலும் இவ்வளவு அதிகமான கோபுரங்கள் இல்லை.

கும்பகோணம் அருகே உள்ள திருநாகேஸ்வரம் ஒப்பிலியப்பன் கோவிலில் தயாராகும் எந்த நைவேத்தியப் பண்டங்களுக்கும் உப்பு சேர்ப்பதில்லை.

ராமேஸ்வரம் ராமநாத சுவாமி கோவிலில் பெருமாள் கோவில்களில் கொடுப்பதுபோல் தீர்த்தம் கொடுக்கிறார்கள்.வேறு எந்த சிவன் கோவிலிலும் இது போன்று தீர்த்தம் கொடுப்பது கிடையாது.

மூலவரே வீதிவலம் வருவது,சிதம்பரம் நடராஜர் மட்டுமே.

மதுரை அருள்மிகு ஸ்ரீ மீனாட்சி அம்மன் கோவிலில் உள்ள பொற்றாமரைக் குளத்தில் மீன்கள் வளராது.

கன்னியாகுமரி மாவட்டம் தக்கலை அருகிலுள்ள கேரளபுரத்தில் சிவபெருமானுக்கு கோவில் உள்ளது. இங்கு அரச மரத்தடியில் நிறம் மாறும் அதிசய விநாயகர் இருக்கிறார். ஆவணி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் வெள்ளை நிறமாகவும்,மாசி மாதத்திலிருந்து ஆறு மாதங்கள் கறுப்பாகவும் மாறி விடுகிறார்.சந்திர காந்தக் கல்லால் உருவாக்கப்பட்ட இந்தச் சிலைக்கு இப்படி ஒரு சக்தி இருக்கிறது.

சிதம்பரம் ஆலயத்தில் ஒரே இடத்தில் நின்றபடி,ஸ்ரீகோவிந்தராஜப் பெருமாளையும்,ஸ்ரீ நடராஜரையும் தரிசிக்கலாம்.

சைவர்களுக்குரிய திருவாதிரையும்,வைணவர்களுக்குரிய வைகுண்ட ஏகாதசியும் ஒரே மாதத்தில் ஒரே திருக்கோவிலில் நடைபெறுவது சிதம்பரத்தில்.

எல்லாத் திருத்தலங்களிலும் பெருமாளின் இடது கையில் தான் சங்கு காணப்பெறும்,திருக்கோவிலூரில் மட்டும் வலது கையில் சங்கு வைத்துள்ளார்.

இமயமலைச் சாரலில் இருக்கும் திருத்தலங்களில் ஒன்று பத்ரிநாத். மே மாதம் முதல் வாரம் நடைதிறப்பார்கள்.நவம்பர் மாதம் முதல் வாரத்தில் மூடுவார்கள். நவம்பரில் கோவிலை மூடும் போது ஒரு தீபம் ஏற்றுவார்கள்.அந்த தீபம் மீண்டும் கோவில் திறக்கப்படும்வரை அதாவது,ஆறு மாதம் எரிந்து கொண்டே இருக்கும்.

காசியில் பல்லிகள் இருந்தாலும் ஒலிப்பதில்லை.காசி நகரைச் சுற்றி 45 கல் எல்லை வரை கருடன் பறப்பதில்லை.


குளித்தலை, மணப்பாறை வழியில் இருப்பது ஐவர் மலை என்ற ரத்தினகிரி மலை உள்ளது.இம்மலை மேல் காகங்கள் பறப்பதில்லை.

நவக்கிரகப் பிரதிஷ்டை கோவிலில் வடகிழக்குப் பகுதியில் தான் அமைய வேண்டும் என்று சிற்ப சாஸ்திரம் கூறுகிறது.

ஆழ்வார்குறிச்சியில் நடராஜர் சிலை ஒரே கல்லினால் ஆனது.தட்டினால் வெண்கல ஓசை வரும்.

சமயபுரம் ஸ்ரீமாரியம்மன் உட்கார்ந்த கோலத்தில் மிகப் பெரிய திருமேனி. இவ்வளவு பெரிய ரூபமுள்ள அம்பிகை வேறு எந்த கர்பகிரகத்திலும் இல்லை. இத்திருமேனி சில மூலிகைகளால் ஆக்கப்பட்டது.

தேனி மாவட்டம் கம்பம் அருகில் உள்ள சுருளிமலையில்,குகையில் விபூதி அள்ள அள்ள வந்து கொண்டே இருக்கும்.இந்தக் குகைக்குப் பெயர் திருநீர்குகை.திருநீறு தானாகவே விளையும்.மற்ற திருத்தலங்கள் ,கதிர்காமம்,மருதமலை,திருநீற்று மலை,கங்கை கரையில் உள்ள திருவருணை.



ரத்னகிரி மலையில் உள்ள முருகனுக்கு அபிஷேகம் செய்யும் பால் சிறிது நேரத்தில் தயிராக மாறும் அதிசயம் நடக்கிறது.

சென்னிமலை முருகனுக்கு அபிஷேகம் செய்யும் தயிர் புளிப்பதில்லை.

தேனி மாவட்டம் தெப்பம்பட்டியில் உள்ள வேலப்பர் கோவிலில் உள்ள மூலவர் சுயம்பு மூர்த்தி.இந்தக் கோவில் அருகில் உள்ள மாமரத்தின் அடியில் இருந்து ஊற்று நீர் பொங்கி வந்து கொண்டேயிருக்கிறது.

அம்மன் சந்நிதி இல்லாத கோவில் காஞ்சி ஏகாம்பரநாதர் கோயில்.


கிருஷ்ணகிரி மாவட்டம்,தேன்கனிக்கோட்டை அருகே உள்ளது கோட்டையூர். இங்குள்ள நூற்று ஒன்று சாமி மலை மீது உள்ள குகையில் ஒரு அடி உயரம் கொண்ட கல்லால் ஆன அகல் விளக்கு இருக்கிறது.இதில் இளநீர் விட்டு தீபமேற்றினால் அது பிரகாசமாக எரியும் அதிசயத்தைக் காணலாம்.

ஜெயங்கொண்டத்தில் உள்ள கங்கை கொண்ட சோழபுரம் கோவிலில் உள்ள கிணற்றிற்கு அருகில் ஒரு சிங்கத்தின் சிற்பம் இருக்கும். சிங்கத்தின் வாய் பகுதியில் ஒரு கதவு தென்படும்.அதன் வழியாக கீழே இறங்கினால் கிணற்றில் குளிக்கலாம். ஆனால் மேலேயிருந்து பார்த்தால் நாம் குளிப்பது தெரியாது.

திருநல்லூர் கல்யாணசுந்தரேஸ்வரர் (பஞ்சவர்ணேஸ்வரர்) திருக்கோவிலில்,6 நாழிகைக்கு ஒரு முறை சிவலிங்கம் வர்ணம் மாறுகிறது.

திருக்கழுக்குன்றத்தின் தெப்பக்குளத்தில் 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை சங்கு தோன்றுகிறது. சிவனுக்கு படைக்கப்பட்ட பிரசாதத்தை கழுகு உண்ணும் அதிசயத்தையும் இங்கே பார்க்கலாம்.

திருச்செந்தூரில் சூரனை வதம் செய்ததும்,தாமரை மலரைக் கொண்டு சிவபூஜை செய்தார்,முருகப்பெருமான். அதை உணர்த்தும் வகையில் மூலவர் சிலையின் வலது கையில் தாமரை மலர் உள்ளது.




-கோ.சுரேஷ்குமார்
கோவில்பட்டி

# ராஷ் பிஹாரி லால் மண்டல் வரலாறு

மிதிலாவின் யாதவ மன்னரும் சிங்கமுமான மறைந்த ராஷ் பிஹாரி லால் மண்டல் - 1908 ஏப்ரல் 27 ஆம் தேதி கல்கத்தாவிலிருந்து வெளியிடப்பட்ட இந்தியாவின் புகழ்பெற்ற நாளிதழான அமிர்த பஜார் பத்திரிகாவின் தலையங்கம், மதேபுராவின் முர்ஹோ எஸ்டேட்டின் ஜமீன்தாரான ராஷ் பிஹாரி லால் மண்டல், பாகல்பூரின் திமிர்பிடித்த மாவட்ட நீதிபதி திரு. எஃப்.எஃப். லியால் மீது தலையிட்டு நடவடிக்கை எடுத்ததற்காக அவரைப் பாராட்டியது.
மேலும், லயாலின் பாரபட்சமான அணுகுமுறையின் அடிப்படையில் தனது வழக்குகளை பாகல்பூரிலிருந்து தர்பங்காவிற்கு மாற்றக் கோரி கல்கத்தா உயர் நீதிமன்றத்தில் மண்டல் தாக்கல் செய்த மனு ஏற்றுக்கொள்ளப்பட்டது. இந்த உத்தரவின் பேரில் கல்கத்தா உயர் நீதிமன்ற நீதிபதிகளுக்கு எதிராக அவதூறான கருத்துக்களைத் தெரிவித்து லியால் மீண்டும் பிரச்சினையை கிளப்பினார், மேலும் அதற்காக மீண்டும் அவர் மீது வழக்குத் தொடரப்பட்டது. அதற்கு முன்னர், 1908 பிப்ரவரி 22 ஆம் தேதி அமிர்த பஜார் பத்திரிகா இதழில் இந்தப் பிரச்சினை குறித்து செய்தி வெளியானது. அதன்படி, ராஷ்பிஹாரி லால் மண்டலின் வழக்கறிஞர் திரு. ஜாக்சன், நீதிபதி கீட் முன் வாதிட்டார். 1902 ஆம் ஆண்டு முதல், மண்டல், அப்போதைய மாவட்ட நீதிபதி திரு. ஷிர்ரெஸின் உத்தரவின் பேரில் மாதேபுராவின் மையத்தில் (இப்போது ராஷ்பிஹாரி வித்யாலயா உள்ளது) ஒரு குறிப்பிட்ட நிலத்தை விட்டுக்கொடுக்க மறுத்ததால், நிர்வாகம் மற்றும் காவல்துறையின் கோபத்திற்கு ஆளானார்.

அப்போதிருந்து, திரு. மண்டல் மீது தொடர்ச்சியான குற்றவியல் வழக்குகள் தொடரப்பட்டன, மேலும் அவர் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள ஒரு டஜன் முறைக்கு மேல் உயர் நீதிமன்றத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. கல்கத்தா உயர் நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் கைது செய்யப்படுவதற்கு முன்பு ஜாமீன் வழங்கப்பட்ட முதல் நபர் (இப்போதெல்லாம் முன்ஜாமீன் போன்ற பொதுவானது) மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டல் என்பது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. பாகல்பூர் மாவட்டத்தின் வர்த்தமானி, ராஷ்பிஹாரி லால் மண்டலின் அசாதாரண வழக்கையும் குறிப்பிட்டுள்ளது. மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டல் பல சிறப்புகளைக் கொண்டிருந்தார். 1866 ஆம் ஆண்டு முர்ஹோவின் ஜமீன்தாரான ரகுபர் தயாள் மண்டலுக்குப் பிறந்த இவர், ராணிப்பட்டியில் கணிசமான சொத்துக்களைப் பெற்றார். ராஷ்பிஹாரி லாலின் பெற்றோர் அவர் மிகவும் இளமையாக இருந்தபோதே இறந்துவிட்டனர், மேலும் அவர் இளம் பருவத்திலிருந்தே தனது தோட்டத்தை கவனித்துக் கொள்ள வேண்டியிருந்தது. அவர் பதினொன்றாம் வகுப்பு வரை கல்வி பயின்றார், மேலும் சமஸ்கிருதம், இந்தி, மைதிலி, ஆங்கிலம், உருது, பாரசீகம் மற்றும் பிரெஞ்சு உள்ளிட்ட பல மொழிகளை அறிந்திருந்தார். பல்வேறு மொழிகளில் தினசரி செய்தித்தாள்கள் முர்ஹோவில் அவரது படுக்கைக்கு அருகில் இருந்தன. 1908 வாக்கில் ராஷ்பிஹாரி லால் மண்டல் தேசிய இயக்கத்தின் முன்னணிக்கு வந்தார், சமூக நீதி இயக்கத்தில் தனது பங்களிப்பைத் தொடங்கினார் மற்றும் பிரிட்டிஷ்



ஆட்சியாளர்களுக்கு எதிராக தனது சட்டப் போராட்டத்தைத் தொடர்ந்தார். இருப்பினும், மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டல் டெல்லியில் ஐந்தாம் ஜார்ஜ் மன்னரின் முடிசூட்டு விழாவில் கலந்து கொண்டு, யாதவர்களின் உரிமைகளைக் கோருவதற்காக மொன்டேகு-செல்ம்ஸ்ஃபோர்டு குழுவிற்கு யாதவத் தலைவர்களின் குழுவை வழிநடத்தி வரலாறு படைத்தார், மேலும் இராணுவத்தில் அஹிர் படைப்பிரிவை நிறுவினார். இங்கு அவர் வைஸ்ராய்க்கு பாரம்பரிய 'சலாமி' வழங்குவதற்குப் பதிலாக லார்ட் செல்ம்ஸ்ஃபோர்டுடன் கைகுலுக்கினார். பீகாரில் இருந்து மாகாண காங்கிரஸ் குழு மற்றும் அகில இந்திய காங்கிரஸ் குழுவில் உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்ட யாதவ சமூகத்தின் முதல் தலைவர், பின்தங்கிய வகுப்புகள் அல்ல, ராஷ்பிஹாரி லால் மண்டல் ஆவார். அவர் கல்கத்தாவில் சுரேந்திர நாத் பானர்ஜியா, பிபின் சந்திர பால், சச்சிதானந்த் சின்ஹா மற்றும் பிற காங்கிரஸ் தலைவர்களுடன் தொடர்பு கொண்டார், மேலும் 1918 இல் அவர் இறக்கும் வரை பீகார் காங்கிரஸ் தலைமையில் முன்னணியில் இருந்தார். டாக்டர் ராஜேந்திர பிரசாத் 1952 ஆம் ஆண்டு விதான் சபாவிற்கு காங்கிரஸ் டிக்கெட் பெற சென்றபோது, மறைந்த ராஷ்பிஹாரி லால் மண்டலின் இளைய மகன் மறைந்த பி.பி. மம்தாலுடன், நாங்கள் மாணவர்களாக இருந்தபோது ராஷ்பிஹாரி பாபு கல்கத்தாவில் எங்களுக்கு உத்வேகமாகவும் வழிகாட்டியாகவும் இருந்தார் என்று நம்பிக்கை தெரிவித்தார். ராஷ்பிஹாரி லால் மண்டல் 1911 டிசம்பரில் முர்ஹோ, மாதேபுராவில் முதல் கோபேஜாதி மகாசபையை (பின்னர் யாதவ் மகாசபை என்று பெயரிடப்பட்டது) ஏற்பாடு செய்தார்.
இந்த முயற்சியில் அவருடன் இணைந்த மற்ற யாதவ் தலைவர்களில் கேசவ் லால், தேவ்குமார் பிரசாத், சாந்த் தாஸ் (மதவியாளர்), சீதா ராம், மேவ லாவ் லால் நாராயண் ரவுத் (கோரக்பூர்), ஷிவ் நந்தன் பிரசாத் (மனுதாரர்), ஜமுனா பிரசாத் (சாப்ரா), ஃபெகு ராம் (ஜான்பூர்), நந்த்லால் ராய் (தசரா, தர்பங்கா), ராம் தானி கோபே, ராம் தியான் பிரசாத் (முசாபர்பூர்), சியாம்பர்தாஸ் (ஹசாரிபாக்), ரகுநந்தன் மன், ஷிவ்ல் பிரசாத் (சாலிகிராம்), ரகுநந்தன் லான் பிரசாத் பிரசாத் மண்டல் (மாதேபுரா). யாதவர்களிடையே கல்வியை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், பள்ளிகள், கல்லூரிகள், தங்கும் விடுதிகள் மற்றும் உதவித்தொகை வழங்குதல், குழந்தை திருமணத்தை நிறுத்துதல், வரதட்சணை முறையை முடிவுக்குக் கொண்டுவருதல், மது அருந்துவதைத் தவிர்ப்பது, விவசாய நடைமுறைகளை மேம்படுத்துதல், பசுக்களைப் பாதுகாத்தல், வணிகத்தில் பங்கேற்பது, தங்களுக்குள் சண்டையிடுவதைத் தவிர்ப்பது, ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு செயலாளருடன் கோபே ஜாதி கட்டிடங்கள் மற்றும் அமைப்பை நிறுவுதல், "கோபால் மித்ர்" என்ற மாத இதழை வெளியிடுதல் மற்றும் ஆண்டுதோறும் வெவ்வேறு இடங்களில் மகாசபாவின் அமர்வை நடத்துதல் ஆகியவை மகாசபாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் அடங்கும். மகாசபா எடுத்த மிக முக்கியமான நடவடிக்கை, பின்னர் சமூகவியலாளர்களால் "சமஸ்கிருதமயமாக்கல்" என்று அழைக்கப்பட்டது அல்லது 'ஜனயு தரன்' விழாவை நடத்தியது. இது உயர் சாதியினரால் கடுமையாக எதிர்க்கப்பட்டது, அதே நேரத்தில் முங்கரில் புனித நூலை அணிந்த யாதவர்கள் தீக்குளிக்கப்பட்டனர். மறைந்த ராஷ் பிஹாரி லால் மண்டல் 25-26 தேதிகளில் பனாரஸில் 51 வயதில் தனது இறுதி மூச்சை விட்டபோது அது ஒரு தனித்துவமான தற்செயல் நிகழ்வு.

ஆகஸ்ட் 1918, பீகாரின் முன்னாள் முதல்வரும் அவரது இளைய மகனுமான பி.பி. மண்டல் இங்குதான் பிறந்தார்.

# மூணாறில் எருமை மாடுகளை பார்த்து மிரண்டு ஓடிய யானைகள்



**மூணாறு, ஏப்.12:**

இடுக்கி மாவட்டம் அடிமாலி அருகே மாங்குளம் பகுதியில் உள்ள ஆனைகுளம் ஆற்றில் காட்டு யானைகள் அடிக்கடி தண்ணீர் குடிக்க வருவது வழக்கம். இந்தநிலையில் கோடை வெயில் காரணமாக ஆற்றில் நீர்வரத்து குறைந்துள்ளது.

இதை யடுத்து நேற்று ஒரு காட்டு யானை அதன் குட்டியுடன் தண்ணீர் குடிக்க ஆற்றங்கரை பகுதிக்கு வந்தது. அப்போது அப்பகுதியில் விவசாயி வளர்த்து வந்த 2 எருமை மாடுகள் மேய்ந்து கொண்டி ருந்தன. இதனை பார்த்த அந்த யானைகள் தண்ணீர் குடிக்காமல் பிளிறியபடி அங்கிருந்து ஓடியது.

பொதுவாக கூர்மையான கொம்புகள் கொண்ட எருமை மாடுகள் தாக்கும் அபாயம் இருப் பதால், காட்டு யானைகள் அவற்றை கண்டால் விலகி செல்வது வழக்கமாகும்.

# பாம்பை கூட நம்பலாம்: பாஜகவை நம்ப முடியாது: மம்தா பானர்ஜி



**புதுடெல்லி, ஏப்.12:**

மேற்கு வங்காள சட்டசபை தேர்தலையொட்டி வடக்கு 24 பர்கானாஸ் மாவட்டத்தில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் அந்த மாநில முதல்-மந்திரியும், திரிணாமுல் காங்கிரஸ் தலைவருமான மம்தாபானர்ஜிபேசியதாவது: மத்தியில் உள்ள பாஜக ஆட்சியில் இந்தியாவில் உள்ள எந்தவொரு அமைப்பும் நடுநிலையுடன் செயல்படவில்லை.

அந்தகட்சிஅனைத்தையும் விலைக்கு வாங்கிவிட்டது. உத்தரபிரதேசத்தில் இருந்து ஒருரெயில்நிறைய50ஆயிரம் ஆட்கள் அசாம் தேர்தலுக்கு அழைத்துச்செல்லப்பட்டனர். மேற்கு வங்காளத்திலும் வெளியிலிருந்து ஆட்களை கொண்டு வரும் அதே தந்திரத்தை பாஜக பயன்படுத்த முயற்சிக்கிறது.

அதனால்தான் அதி காரிகள் இடமாற்றம் செய்ய ப்படுகின்றனர். பாம்பை கூட நம்பலாம், பா.ஜனதாவை நம்பவே முடியாது. வெளியில் இருந்து இங்கு ஆட்கள் அழைத்துவரப்படுகிறார்கள். பணம், போதை பொருள் கொண்டு வரப்படுகிறது. ஆனால் எங்கள் கட்சியினர் அதை வீழ்த்தி வெற்றி பெறுவார்கள்" என்றார்.

# ககன்யான் திட்டத்தின் 'ஏர் டிராப்' இரண்டாம் கட்ட சோதனை வெற்றி.. இஸ்ரோ சாதனை



**புதுடெல்லி, ஏப்.12:**

இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தின் (இஸ்ரோ) கனவு திட்டமான மனிதனை விண்ணுக்கு அனுப்பும் ககன்யான் திட்டம் 2027-ம் ஆண்டு செயல்படுத்தப்பட இருக்கிறது. இதற்காக 3 ஆள் இல்லாத ராக்கெட்டுகளை விண்ணில் செலுத்தி சோதனை நடத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது. இதனை தொடர்ந்து பல்வேறு சோதனைகளில் விஞ்ஞானிகள் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தத்திட்டத்துக்காக இந்திய விமானப்படை வீரர்களான சுபான்சு சுக்லா, பிரசாந்த் நாயர், அஜித்கிருஷ்ணன், அங்கத்பிரதாப் ஆகிய 4 குரூப் கேப்டன்கள் விண்வெளி வீரர்களாக தேர்வு செய்யப்பட்டு பல்வேறு பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன. இந்த திட்டத்தில் மிக முக்கியமான கட்டமான 2-வது ஒருங்கிணைந்த ஏர் டிராப் சோதனை நேற்று வெற்றிகரமாக நடந்தது. ஆந்திர மாநிலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ்தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இந்த சோதனை நடைபெற்றது. விண்வெளி வீரர்கள் பயணிக்கும் விண்கலம், விண்வெளியில் இருந்து பூமிக்கு திரும்பும் போது பாதுகாப்பாக தரையிறக்குவது மிகப்பெரிய சவால் நிறைந்த பணி. விண்கலம் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழையும்போது அதன் வேகம் மிக அதிகமாக இருக்கும். அந்த வேகத்தை தக்கட்டுப்படுத்தி, கடலில் பாதுகாப்பாக இறக்குவதற்குப் பயன்படுத்தப்படும் பாராசூட் அமைப்புகளின் செயல்திறனைச் சோதிப்பதே இந்த 'ஏர் டிராப்' சோதனையின் முக்கிய நோக்கமாகும். அதன்படி இந்திய விமானப்படையின் சினூக் ஹெலிகாப்டர் மூலம். சுமார் 5.7 டன் எடையுள்ள ககன்யான் மாதிரி விண்கலம் சுமார் 3 கிலோ மீட்டர் உயரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. பின்னர் நிர்ணயிக்கப்பட்ட உயரத்தை அடைந்தவுடன், ஹெலிகாப்டரிலிருந்து விண்கலம் விடுவிக்கப்பட்டது. அந்த விண்கலம் கீழே விழத் தொடங்கியதும், அதில் பொருத்தப்பட்டிருந்த 10 பாராசூட்டுகளும் படிப்படியாகத் தானியங்கி முறையில் விரிவடைந்தன.

முதலில் சிறிய பாராசூட்டுகளும், இறுதியாக பிரதான பாரா சூட்டுகளும் விரிவடைந்து விண்கலத்தின் வேகத்தை ஒரு இறகு போலக் குறைத்தன. அனைத்து பாராசூட்டுகளும் சரியாக செயல்பட்டதால், விண்கலம் திட்டமிட்டபடி ஸ்ரீஹரிகோட்டா கடற்கரைக்கு அருகிலுள்ள வங்கக் கடல் பகுதியில் சுமூகமாக தரையிறங்கியது. ஒருவேளை ஒரு பாராசூட் செயல்படத் தவறினாலும், மற்றொன்று இயங்கி விண்கலத்தைக் காப்பாற்றும் 'ரெடென்டன்சி' தொழில்நுட்பம் இதில் உறுதி செய்யப்பட்டது.

கடலில் விழுந்த விண்கலத்தை இந்தியக் கடற்படை வீரர்கள் வெற்றிகரமாக மீட்டனர். இது விண்வெளி வீரர்கள் பூமிக்குத் திரும்பிய பின் அவர்களை மீட்கும் ஒத்திகையாகவும் அமைந்தது. இந்த ஏர் டிராப் சோதனையின் வெற்றி, மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் முன் மேற்கொள்ளப்பட வேண்டிய 'ஆளில்லா ககன்யான் விண்கலம் ஏவுதலுக்குப் பச்சைக்கொடி காட்டியுள்ளது.

# மத்திய பிரதேசம்: ஆழ்துளை கிணற்றில் விழுந்த 2½ வயது குழந்தை சாவு

**போபால், ஏப்.12:**

ராஜஸ்தான் மாநிலம் பாலி மாவட்டத்தைச் சேர்ந்தவர் பிரவீன் தேவாசி. இவரது குடும்பத்தினர் மத்தியபிரதேச மாநிலம் உஜ்ஜைனி அருகே உள்ள ஜலாரியா கிராமத்தில் ஆடு மேய்க்கும் தொழிலில் ஈடுபட்டு வந்தனர். நேற்று முன்தினம் மாலை விளையாடிக் கொண்டிருந்த அவருடைய 2½ வயது மகன் பகீரத் எதிர்பாராதவிதமாக அங்குள்ள ஆழ்துளை கிணற்றுக்குள் தவறி விழுந்துவிட்டான்.

தகவல் அறிந்ததும் தேசிய பேரிடர் மீட்பு படை மற்றும் மாநில பேரிடர் மீட்பு படை வீரர்கள் சம்பவ இடத்திற்கு விரைந்தனர். ஆழ்துளை கிணற்றுக்கு இணையாக மற்றொரு பள்ளம் தோண்டும் பணி போர்க்கால அடிப்படையில் தொடங்கப்பட்டது. சுமார் 65 அடி ஆழத்தில் குழந்தை பகீரத் சிக்கியிருப்பது தெரியவந்தது. இரவு முழுவதும் மீட்பு பணி நீடித்தது.

சுமார் 40 அடி ஆழம் வரை பள்ளம் தோண்டப்பட்ட நிலையில், அங்கு கடினமான பாறைகள் தென்பட்டன. இதனால் பொக்லைன் எந்திரங்களால் தொடர்ந்து தோண்ட முடியாத நிலை ஏற்பட்டது. இதையடுத்து போபால் மற்றும் இந்தூரில் இருந்து வரவழைக்கப்பட்ட நவீன எந்திரங்கள் மூலம் பாறைகள் உடைக்கப்பட்டன.

கேமரா மூலம் குழந்தை கண்காணிக்கப்பட்டு, ஆக்சிஜன் தொடர்ச்சியாக வழங்கப்பட்டது. இந்த நிலையில் சுமார் 23 மணி நேர போராட்டத்திற்கு பிறகு நேற்று மாலை குழந்தை பகீரத்தை ஆழ்துளை கிணற்றில் இருந்து மீட்டனர். உடனடியாக அவன் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டான். ஆனால் அங்கு சிறுவனை பரிசோதித்த டாக்டர்கள் அவன் ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது.

# இந்தியா சார்பில் 90 மின்சார பஸ்கள்; மொரீசியஸ் பிரதமரிடம் மத்திய மந்திரி ஜெய்சங்கர் ஒப்படைப்பு

**புதுடெல்லி, ஏப்.12:**

மொரீசியஸ் நாட்டுக்கு மத்திய வெளிவிவகார துறை மந்திரி ஜெய்சங்கர் 2 நாட்கள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக கடந்த வியாழக்கிழமை அந்நாட்டின் போர்ட் லூயிஸ் நகரை சென்றடைந்த அவரை, மொரீசியசுக்கான வெளிவிவகாரம், மண்டல ஒருங்கிணைப்பு மற்றும் சர்வதேச வர்த்தக மந்திரி தனஞ்ஜெய் ராம்புல் வரவேற்றார்.

இந்த 2 நாள் பயணத்தில், இரு நாடுகளிடையே, மண்டல பாதுகாப்பு மற்றும் பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்தும் நோக்கில், தொடர்ச்சியான உயர்மட்ட ஆலோசனைகளை அவர் மேற்கொண்டார்.




இந்த பயணத்தின் ஒரு பகுதியாக, இந்தியா சார்பில் மத்திய மந்திரி ஜெய்சங்கர் மொரீசியஸின் பிரதமர் நவீன் ராம்கூலத்திடம் 90 மின்சார பஸ்களை ஒப்படைத்ததுடன், இந்தியாவுக்கும், மொரீசியசுக்கும் இடையேயான நிலையான போக்குவரத்து மற்றும் பசுமை கூட்டாண்மைக்கான இருதரப்பு ஒத்துழைப்பை வலுப்படுத்தலையும் உறுதிப்படுத்தினார்.

இதேபோன்று, கடல்சார் பாதுகாப்பு, மண்டல ஸ்திரத்தன்மை மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி ஆகியவை பற்றி விவாதிப்பதற்கான 9-வது இந்திய பெருங்கடல் மாநாட்டிலும் அவர் பங்கேற்றார்.

# சுற்றுலா வந்த இடத்தில் மாயமான கேரள சிறுமி: 4 நாட்களுக்கு பிறகு கிடைத்தபோது.. என்ன நடந்தது?

**சிக்கமகளூரு, ஏப்.12:**

கேரளமாநிலம்பாலக்காடு பகுதியைச்சேர்ந்த 10-ம்வகுப்பு மாணவி ஸ்ரீநந்தா (வயது 14). இவர் தனதுபெற்றோர் மற்றும் உறவினர்கள் உள்ளிட்ட சுமார் 40 பேருடன் கர்நாடக மாநிலம் சிக்கமகளூருவுக்கு சுற்றுலா சென்றிருந்தார். அவர்கள் கடந்த 7-ந் தேதி முல்லையன்கிரி மற்றும் சந்திரதிரிகோண மலைப்பகுதிகளை சுற்றிப் பார்த்தனர்.

மாணிக்கத்தாரா அருவி அருகே சென்ற அவர்கள் மாலை நேரத்தில் கீழிறங்கும் போது ஸ்ரீநந்தா திடீரென மாயமானார். போலீசார் மற்றும் வனத்துறையினர் தேடுதல்பணியில் ஈடுபட்டனர். நான்கு நாட்கள் தொடர்ந்து நடந்த தீவிர தேடுதல் வேட்டைக்கு பின்னர், டிரோன் உதவியுடன் சுமார் 2 ஆயிரம் அடி ஆழமான பள்ளத்தில் ஸ்ரீநந்தா பிணமாக கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதையடுத்து மீட்புக்குழுவினர் இறங்கி கயிறு கட்டி மாணவியின் உடலை மீட்டனர். செல்பி எடுக்கும்போது மலையில் இருந்து தவறி விழுந்தாரா? யாரேனும் அவரை பள்ளத்தில் தள்ளிவிட்டு கொன்றார்களா? அல்லது பள்ளத்தில் குதித்து தற்கொலை செய்துகொண்டாரா? என பல்வேறு கோணங்களில் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக சிக்கமகளூரு காவல் கண்காணிப்பாளர் ஜிதேந்திர குமார் கூறுகையில், "சடலம் தற்போது கண்டறியப்பட்டுள்ளது, அவர் அணிந்திருந்த ஆடைகள் சேதமடையாமல் உள்ளன. உடல்பிரேதபரிசோதனைக்கு அனுப்பப்பட்டுள்ளது. அடுத்தகட்ட நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன" என்று கூறினார்.

# புதிய விதி: ரூ.10 ஆயிரத்துக்கு மேல் அனுப்ப இனி 1 மணி நேரமாகும்.!




**மும்பை, ஏப்.12:**

வாடிக்கையாளர்கள், இனி 10,000 ரூபாய்க்கு அதிகமான தொகையை டிஜிட்டல் முறையில் ஒரு வங்கி கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு அனுப்பும்போது, 1 மணிநேரம் கழித்தே சென்றடையம் வகையிலான புதிய விதிகளை ரிசர்வ் வங்கி முன்பொழிந்து உள்ளது.

டிஜிட்டல்பணப்பரிவர்த்தனை மோசடிகளை கட்டுப்படுத்தும் நோக்கில், ரிசர்வ் வங்கிஇந்தகட்டுப்பாடுகளை விதிக்க திட்டமிட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் ஏமாந்துபணம்அனுப்புவதை தடுக்கும் வகையில், பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகளை ஆர்.பி.ஐ., பரிந்துரை செய்துள்ளது.

இதன் விபரம்!

டிஜிட்டல் முறையில் ஒரு வங்கி கணக்கிலிருந்து மற்றொரு கணக்கிற்கு 10,000 ரூபாய்க்கு அதிகமான தொகையை அனுப்பும்போது, ஒரு மணிநேரம் கழித்தே சென்றடையும். இந்த இடைவெளியில் மோசடியை உணர்ந்தால், வாடிக்கையாளர்கள் அந்த பரிவர்த்தனையை ரத்து செய்துகொள்ள முடியும்

முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள், 50,000 ரூபாய்க்கு மேற்பட்ட பணப்பரிவர்த்தனைகளை மேற்கொள்ளும்போது, அவர்கள் முன்கூட்டியே நியமித்த 'நம்பகமான நபரின்' ஒப்புதலை பெறுவது கட்டாயமாக்கப்படும்.

ஆபத்து காலங்கள் அல்லது மோசடி நடப்பதாக சந்தேகிக்கும் நேரங்களில், வாடிக்கையாளர்கள் தங்களதுஅனைத்துடிஜிட்டல் பரிவர்த்தனைகளையும் ஒரே நொடியில் உடனடியாக முடக்கும் சிறப்பு வசதி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

இந்த வரைவு விதிகள் குறித்து, பொதுமக்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து வரும் மே 8ம் தேதி வரை கருத்துகள் வரவேற்கப்படுவதாக ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

# சாதிவாரி கணக்கெடுப்புக்கு தடை கோரி மனு -சுப்ரீம் கோர்ட்டு தள்ளுபடி

**புதுடெல்லி, ஏப்.12:**

இந்தியாவில் 16-வது தேசிய மக்கள்தொகை கணக்கெடுப்பின் முதல் கட்டம் கடந்த 1-ந்தேதி தொடங்கியது.1931-க்கு பிறகு முழுமையான சாதிவாரியான விவரங்களை உள்ளடக்கிய முதல் கணக்கெடுப்பாகவும், இந்தியாவின் முதலாவது முழுமையான டிஜிட்டல் கணக்கெடுப்பாகவும் இது நடக்க உள்ளது.

இந்நிலையில்சாதிவாரிமக்கள்தொகைகணக்கெடுப்பை நிறுத்துமாறு மத்திய அரசுக்கு உத்தரவிட கோரியும் ஒரே ஒரு குழந்தையை மட்டும் கொண்ட குடும்பங்களுக்கு பொருளாதார சலுகைகளை வழங்குவதற்கான கொள்கைகளை வகுக்ககோரியும் பொதுநல மனு சுப்ரீம் கோர்ட்டில் தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனு விசாரணைக்கு வந்த போது கோபமடைந்த தலைமை நீதிபதி சூர்யகாந்த் தலைமையிலான அமர்வு, "நீங்கள் கண்ணியமற்ற மொழியை பயன்படுத்தி உள்ளீர்கள். உங்கள் மனுவில் இத்தகைய மொழி நடையை எழுத வேண்டும் என்ற எண்ணம் உங்களுக்கு எங்கிருந்து வந்தது? என கூறி தள்ளுபடி செய்தது.

# யமுனை ஆற்றில் படகு கவிழ்ந்தது: 10 பேர் பலியான சோகம்

**லக்னோ, ஏப்.12:**

உத்தர பிரதேச மாநிலம் மதுரா அருகே கேஷிகாட் பகுதியில்யமுனாநதியில், சுமார் 2530 யாத்திரிகர்கள் பயணம் செய்த படகு கவிழ்ந்தது. இதில் 10 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் பலர் மாயமானதாக அஞ்சப்படுகிறது.

விருந்தாவன் பகுதியில் உள்ள தற்காலிக (பாண்டூன்) பாலம் அருகே அதிக நெரிசலுடன் சென்ற படகு திடீரென கவிழ்ந்ததாக மாவட்ட நிர்வாகம் கூறியுள்ளது. உள்ளூர் போலீசார் மற்றும் பேரிடர் மீட்பு குழுக்கள் உடனடியாக சம்பவ இடத்திற்கு சென்று மீட்பு பணிகளில் ஈடுபட்டனர். இதுவரை 14 பேருக்கும் மேற்பட்டோர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.இன்னும் சுமார் 12 பேர் காணாமல் போயிருக்கலாம் என்ற அச்சத்தில் தேடுதல் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

# சமையல் எரிவாயு விநியோகத்தில் தாமதம்: 200 நிறுவனங்களுக்கு நோட்டீஸ்

**புதுடெல்லி, ஏப்.12:**

தமிழகத்தின் எரிபொருள் விநியோக நிலை குறித்து வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்ட பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: மாநிலத்தில் பெட்ரோல், டீசல், விமான எரிபொருள் உள்ளிட்ட திரவ எரிபொருள்களுக்கு எந்தவித தட்டுப்பாடும் இல்லை. சுத்திகரிப்பு நிலையங்கள் முழுத் திறனில் செயல்பட்டு வருவதால், விநியோகத்தில் எவ்வித சிக்கலும் ஏற்பட வாய்ப்பில்லை. தமிழகத்தில் நாள்தோறும் சுமார் 5 லட்சம் எரிவாயு உருளைகள் தேவைப்படுகின்றன. அந்தத் தேவையை 100 சதவீதம் பூர்த்தி செய்ய எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் தயாராக உள்ளன. தற்போது, வீட்டு உபயோக எரிவாயு உருளை விநியோகத்துக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது. சில பகுதிகளில் நிலவி வரும் காத்திருப்பு காலத்தைக் குறைக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள் உள்ளிட்ட அத்தியாவசியத் தேவைகளுக்கான எரிவாயு முழுமையாக வழங்கப்பட்டு வருகிறது. பதுக்கல் மற்றும் முறைகேடுகளைத் தடுக்க மாநில அரசு 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட திடீர் ஆய்வுகளை நடத்தியுள்ளது. எண்ணெய் சந்தைப்படுத்தும் நிறுவனங்கள் மாநிலம் முழுவதும் 1,500-க்கும் மேற்பட்ட இடங்களில் திடீர் சோதனைகளை நடத்தி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. எரிவாயு உருளைகள் விநியோகத்தில் தாமதம் உள்ளிட்ட புகார்களின்பேரில், 200 விநியோக நிறுவனங்களுக்கு விளக்கம் கேட்டு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது.

தொடர்ந்து, சென்னை புகர் பகுதிகளில் 20 நாள்கள் வரை தாமதம் ஏற்படுவதாக எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அவர், அது குறித்து விரிவான ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும், சில தினங்களுக்குள் அதற்குத் தீர்வு காணப்படும் என்று தெரிவித்தார்.

# ஏற்றுமதி இறக்குமதி போக்குகளை வாரந்தோறும் கண்காணிக்கும் முறை: மத்திய அரசு விரைவில் அறிமுகம்

**புதுடெல்லி, ஏப்.12:**

புது தில்லியில் மத்திய வா்த்தக அமைச்சக செயலா் ராஜேஷ் அக்ரவால் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், இதுதொடா்பாக ஆலோசிக்கப்பட்டது. அப்போது போா் காரணமாக முக்கிய பெட்ரோகெமிக்கல் பொருள்கள் கிடைப்பதிலும், அவற்றின் விலையிலும் பாதிப்பு ஏற்படக் கூடும் என்பது கவனத்தில் கொள்ளப்பட்டது. சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து கூட்டத்தில் தொழில்துறையினா் எடுத்துரைத்தனா். திரவமாக்கப்பட்ட இயற்கை எரிவாயு (எல்என்ஜி), ஹீலியம் மற்றும் பெட்ரோகெமிக்கல் பொருள்கள் தொடா்ந்து கிடைப்பதற்கு உதவிபுரிய வேண்டும், பணப் புழக்கத்தை மேம்படுத்தஜிஎஸ்டிரீ᠁பண்ட் தொகைமுன்கூட்டியேகிடைக்க வழிவகை செய்ய வேண்டும் உள்ளிட்ட கோரிக்கைகள் கூட்டத்தில் முன்வைக்கப்பட்டது என்று மத்திய வா்த்தக அமைச்சக செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பெங்களூருவில் 'சோம்பி' சர்ச்சை: இளைஞர் கைது

**பெங்களூரு, ஏப்.12:**

பெங்களூரு எலஹங்காவை சேர்ந்த ஹேமந்த் குமார் வெளியிட்ட வீடியோவில், "இளைஞர் ஒருவர் சாலையில் 2 மணி நேரமாக ஒரே இடத்தில் அசையாமல் நிற்கிறார். அவர் 'சோம்பி' போதைப் பொருளை பயன்படுத்தியதால் உறைந்து போய் இருக்கிறார்" என கூறியிருந்தார். இந்த வீடியோ சர்ச்சையானது. பெங்களூரு காவல் ஆணையர் சீமந்த் குமார் சிங் உத்தரவின்படி, 'சோம்பி' இளைஞரைப் பிடித்து மருத்துவப் பரிசோதனை செய்தனர். அதில், அவர் மது அருந்தியதும் போதைப் பொருள் பயன்படுத்தாததும் தெரிய வந்தது. இதையடுத்து ஹேமந்த் குமாரை போலீஸார் கைது செய்தனர்.




## சாத்தூரில் பயங்கர ஆயுதங்களுடன் மதுரை கூலிப்படை கும்பல் சிக்கியது



**சாத்தூர், ஏப்.12:** சாத்தூரில் பயங்கர ஆயுதங்களுடன் பதுங்கியிருந்த மதுரையை சேர்ந்த கூலிப்படைக் கும்பலை போலீசார் கைது செய்தனர். அவர்களிடம் இருந்து அரிவாள், கத்தி உள்ளிட்ட ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் குருலிங்காபுரம் பிள்ளையார் கோயில் தெருவை சேர்ந்தவர் அய்யன்ராஜ். இவரது தம்பி அருண்குமார். கடந்த 8ம் தேதி இரவு அய்யன்ராஜ் தனது வீட்டு முன்பு நண்பர் குமார் என்பவருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார். அப்போது, அங்கு வந்த பக்கத்து வீட்டை சேர்ந்த அஜித்குமார், 'எதுக்குடா... என் வண்டியில உட்கார்ந்து பேசிக்கொண்டு இருக்கீங்க' என கேட்டுள்ளார். இதில் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதுபற்றி அஜித்குமார் தனது வீட்டில் குடியிருந்தவர்களிடம் தெரிவித்துள்ளார். அங்கு வந்த 5 பேர் கொண்ட கும்பல், அய்யன்ராஜை தாக்கியுள்ளனர். இதை தடுக்க முயன்ற அவரது தம்பி அருண்குமாரையும் தாக்கினர்.

இதுகுறித்து அருண்குமார் சாத்தூர் நகர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். இன்ஸ்பெக்டர் துரைப்பாண்டி தலைமையிலான போலீசார் அஜித்குமாரின் வீட்டிற்கு சென்று விசாரணை நடத்தினர்.

மேலும், அவரது வீட்டில் சோதனை செய்தபோது அரிவாள், கத்தி, உருட்டுக்கட்டை உள்ளிட்ட ஆயுதங்கள் இருப்பது தெரிய வந்தது. இதையடுத்து, அங்கிருந்த 5 பேரை காவல் நிலையத்திற்கு அழைத்து வந்து கிடுக்கிப்பிடி விசாரணை மேற்கொண்டனர்.

இதில், அவர்கள் மதுரை சிந்தாமணி பர்மா காலனியை சேர்ந்த யோகேஷ் (22), காமராஜர் சாலையை சேர்ந்த கோபி (25), முகேஷ் (24), இனமனஞ்சி நகர் முத்துமணி (27), அய்யர்பங்களா நாக அர்ஜூன் (26) என்பதும், இவர்கள் மீது கொலை, வழிப்பறி உள்ளிட்ட பல்வேறு வழக்குகள் நிலுவையில் இருப்பதும், குற்ற செயல்களில் ஈடுபட அஜித்குமாரின் வீட்டில் கடந்த 3 மாதமாக வாடகைக்கு தங்கி இருந்ததும் தெரிய வந்தது. இதையடுத்து, இவர்கள் 5 பேரையும் போலீசார் கைது செய்து, ஆயுதங்களை பறிமுதல் செய்தனர். இதுதொடர்பாக தலைமறைவான அஜித்குமாரை போலீசார் தேடி வருகின்றனர்.

## மகனை கட்டையால் அடித்து கொன்ற அதிமுக மாஜி பஞ். தலைவர் கைது: பிறந்த நாளன்று இறந்த சோகம்

**துவரங்குறிச்சி, ஏப்.12:** திருச்சி மாவட்டம் மணப்பாறை அடுத்த வடுகப்பட்டியை சேர்ந்தவர் மரியராஜ் (61). அதிமுக முன்னாள் ஊராட்சி தலைவர். இவரது மனைவி 8 ஆண்டுகளுக்கு முன்பு இறந்து விட்டார். 4 பிள்ளைகள் உள்ளனர். திருமணமாகாத 3வது மகன் யேசுதாஸ் (29) என்பவருடன் மரியராஜ் வசித்து வருகிறார். இந்நிலையில் நேற்றுமுன்தினம் இரவு போதையில் இருந்த மரியராஜ், அவரது மகன் யேசுதாசுடன் தகராறில் ஈடுபட்டார்.

இந்த தகராறு கைகலப்பாக மாறியது. இதில் ஆத்திரமடைந்த மரியராஜ், அருகில் கிடந்த கட்டையை எடுத்து மகன் யேசுதாசின் தலையில் ஓங்கி அடித்தார். இதில் படுகாயமடைந்த யேசுதாஸ் மயங்கி விழுந்தார். பின்னர் மரியராஜ் தூங்க சென்றார். நேற்று காலை மரியராஜ் எழுந்து பார்த்தபோது யேசுதாஸ் அசைவின்றி கிடந்தார். அருகில் சென்று பார்த்த போது கட்டையால் தாக்கியதில் மகன் இறந்தது தெரியவந்தது.

இதையடுத்து மணப்பாறை காவல் நிலையத்தில் மரியராஜ் சரணடைந்தார். போலீசார் சம்பவ இடத்துக்கு சென்று யேசுதாஸ் உடலை கைப்பற்றி பிரேத பரிசோதனைக்காக மணப்பாறை அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். இதுகுறித்து போலீசார் வழக்கு பதிந்து சரணடைந்த மரியராஜை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். மரியராஜ் 2008 -2013ல் வடுகப்பட்டி பஞ்சாயத்து தலைவராக பதவி வகித்துள்ளார். மேலும் கொலை செய்யப்பட்ட யேசுதாசுக்கு நேற்று (10ம்தேதி) பிறந்த நாள் என்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னை விமான நிலையத்தில் கொடிய விஷ பாம்புகள் உள்பட 49 அரிய வகை உயிரினங்கள் பறிமுதல்: ஒருவர் சிக்கினார்

**சென்னை, ஏப்.12:** மலேசியா, தாய்லாந்து நாடுகளில் இருந்து விமானங்களில் சென்னைக்கு கொடிய விஷ பாம்புகள் உள்பட 49 அரிய வகை உயிரினங்கள் கடத்தி வந்த ஒருவரை சுங்கத்துறை அதிகாரிகள் கைது செய்தனர். மலேசிய தலைநகர் கோலாலம்பூரில் இருந்து ஏர் ஏசியா பயணிகள் விமானம் சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு வந்தது. அதில் வந்த பயணிகளை சென்னை விமான நிலைய சுங்கத்துறை ஏர் இன்டெலிஜென்ட் அதிகாரிகள் ரகசியமாக கண்காணித்தனர். அப்போது சென்னையைச் சேர்ந்த சுமார் 30 வயது ஆண் பயணி, சுற்றுலா விசாவில் மலேசியாவுக்கு சென்று விட்டு திரும்பி வந்தார். அவர் மீது ஏர் இன்டெலிஜென்ட் அதிகாரிகளுக்கு சந்தேகம் ஏற்பட்டது. அவரை நிறுத்தி அவருடைய உடைமைகளை சோதித்தனர். அவர் வைத்திருந்த பெரிய சூட்கேஸ் மற்றும் கூடைகளை சோதனை செய்தனர்.

அப்போது உடைமைகளுக்குள் கொடிய விஷம் உடைய நாகப் பாம்புகள், ராஜ நாகங்கள் போன்ற 34 உயிரினங்கள் இருந்ததைக் கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அதில், கொடிய விஷம் உடைய 6 நல்ல பாம்புகள், வட அமெரிக்கா வனப்பகுதியில் உள்ள கலிபோர்னியா ராஜ நாகங்கள் 8, சிவப்பு சுருட்டைப் பாம்பு 1, இந்தோனேசியா நீல நாக்கு பாம்புகள் 2, சதுப்பு நிலப் பாம்புகள் 2, நீர் உடும்புகள் 10 என மொத்தம் 34 கொடிய விஷமுடைய அபூர்வ வகை வெளிநாட்டு உயிரினங்கள் இருந்தன. அவைகளை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்து, கடத்தல் பயணியை கைது செய்தனர்.

இதேபோல், தாய்லாந்து நாட்டிலிருந்து தாய் ஏர்வேஸ் பயணிகள் விமானம் சென்னை சர்வதேச விமான நிலையத்திற்கு நேற்று முன்தினம் நள்ளிரவில் வந்தது. அதில் வந்த பயணிகள் அனைவரும் வெளியில் சென்ற பின்பு, கன்வேயர் பெல்டில் ஒரே ஒரு சூட்கேஸ் மட்டும் கேட்பாரற்று கிடந்தது. சுங்க அதிகாரிகள் அந்த சூட்கேசை திறந்து பார்த்தபோது, மஞ்சள் மற்றும் வெள்ளை நிறங்களில் அபூர்வ குரங்குகள், இந்திய பனை அணில், விஷம் உடைய சிலந்திப் பூச்சிகள் என மொத்தம் 15 அபூர்வ வகை உயிரினங்கள் இருந்தன.

இந்த உயிரினங்களை கடத்திக் கொண்டு வந்த ஆசாமி, சுங்க அதிகாரிகளின், கெடுபிடி சோதனைகளை பார்த்து, பயந்து அரிய வகை உயிரினங்கள் இருந்த சூட்கேசை எடுக்காமலேயே தப்பி ஓடியது தெரியவந்தது. இதுதொடர்பாக, சுங்கத்துறை அதிகாரிகள் வழக்கு பதிந்து சிசிடிவி கேமரா காட்சிகள் மூலம் தப்பி ஓடிய பயணியை தேடி வருகின்றனர். பிறகு 49 அபூர்வ வகை உயிரினங்கள் அனைத்தையும், ஏர் ஏசியா மற்றும் தாய் ஏர்லைன்ஸ் விமானங்கள் மூலம் அந்தந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டன.

## தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளின் சோதனையில் 100 டம்மி வாக்குப்பதிவு இயந்திரங்கள் பறிமுதல்




**சென்னை, ஏப்.12:** சென்னையில் தேர்தல் பறக்கும் படை அதிகாரிகளின் சோதனையில் 100 டம்மி வாக்குப்பதிவு இயந்திரங்கள் சிக்கின. ஒரத்தநாடு திமுக வேட்பாளர் வைத்திலிங்கம் படத்துடன் கூடிய விசிட்டிங் கார்டுகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

சென்னை அண்ணாநகர் சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்ட அரும்பாக்கம் 100 அடி சாலையில் நேற்று முன்தினம் இரவு தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது அந்த வழியாக வந்த சரக்கு ஆட்டோ ஒன்றை மடக்கி சோதனை செய்தனர். அப்போது அதில் 100 டம்மி மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் (இவிஎம்) இருந்தது தெரியவந்தது.

மேலும் திமுக ஒரத்தநாடு சட்டப்பேரவை தொகுதி வேட்பாளர் வைத்தியலிங்கத்தின் புகைப்படங்கள் அடங்கிய விசிட்டிங் கார்டுகள் கொண்ட 5 பார்சல்கள் இருந்தன. இதனைக் கண்டு அதிர்ச்சியடைந்த தேர்தல் பறக்கும் படையினர் அனைத்தையும் பறிமுதல் செய்தனர்.

பின்னர் அவற்றை அண்ணாநகர் தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்துக்குக் கொண்டு சென்றனர். விசாரணையில் பார்சல் கொண்டு சென்ற நபர் சேலத்தைச் சேர்ந்த செல்வம் என்பதும், ஆட்டோ ஓட்டி வந்தவர் அண்ணா நகரைச் சேர்ந்த கணேசன் என்பதும் தெரியவந்தது.

பறிமுதல் செய்யப்பட்ட டம்மி இவிஎம் இயந்திரங்களை தனியார் பேருந்து மூலம் ஒரத்தநாடு சட்டப்பேரவை தொகுதிக்கு அனுப்பி வைக்க திட்டமிட்டு இருந்ததும், வாக்கு சேகரிப்பின் போது வைத்திலிங்கம் புகைப்படம் ஒட்டிய இந்த டம்மி மிஷினை காண்பித்து வாக்கு சேகரிக்க திட்டமிட்டு இருந்ததும் தெரியவந்தது.

இந்த விவகாரம் ஒரத்தநாடு சட்டப்பேரவை தொகுதிக்கு உட்பட்டது என்பதால் அந்த தொகுதி தேர்தல் நடத்தும் அதிகாரிக்கு தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கட்சித் தலைவர்களின் பிரச்சாரத்தை முன்கூட்டியே திட்டமிட டிஜிபி உத்தரவு



**சென்னை, ஏப்.12:** பொது மக்களுக்கு இடையூறு ஏற்படாத வகையில், அரசியல் தலைவர்களின் பிரச்சாரத்தை முன்கூட்டியே திட்டமிட வேண்டும் என அனைத்து மாவட்ட போலீஸ் அதிகாரிகளுக்கும் டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் உத்தரவிட்டுள்ளார்.

டிஜிபி சந்தீப் ராய் ரத்தோர் தமிழகம் முழுவதும் உள்ள மண்டல ஐஜி-க்கள், காவல் ஆணையர்கள், டிஐஜி-க்கள், எஸ்பிக்களுடன் காணொலி வாயிலாக ஆலோசனை நடத்தினார்.

அப்போது, தங்களது உயர் அதிகாரிகள் பிறப்பித்த உத்தரவுகளை மட்டுமே பின்பற்ற வேண்டும்.வெளியிலிருந்து வரும் தலையீடுகளை தவிர்க்க உத்தரவிட்டார். இதற்கிடையே, தேர்தல் பாதுகாப்பு தொடர்பாக சுற்றறிக்கை அனுப்பியிள்ளதாகக் கூறப்படுகிறது.

அதில், நட்சத்திர அரசியல் தலைவர்களின் பரப்புரை, மக்கள் பாதுகாப்பு குறித்து முன்கூட்டியே திட்டமிட வேண்டும், சுவிதா இணையதளம் வாயிலாக பிரச்சாரத்துக்கு அனுமதி கேட்பவர்களுக்கு உரிய நேரத்தில் அனுமதி கிடைக்கிறதா என்பதை கண்காணித்து பிரச்சாரம் மற்றும் பொதுக்கூட்டத்துக்கான பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும், வேட்பாளர்களின் பிரச்சாரங்களால் பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படாதவாறு பார்க்க வேண்டும்.

மீறுபவர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைத்து தகவல்களையும் உயர் போலீஸ் அதிகாரிகளின், வழிகாட்டுதலோடு தேர்தல் ஆணையத்தின் கவனத்துக்குக் கொண்டு செல்ல வேண்டும், தேர்தல் ஆணையம் நடத்தும் அனைத்து ஆலோசனைக் கூட்டங்களிலும் தவறாது பங்கேற்க வேண்டும்.

இவ்வாறு சுற்றறிக்கையில் கூறப்பட்டுள்ளதாக போலீஸ் அதிகாரிகள் தெரிவித்தனர்.

## சென்னை மாவட்டத்தில் வாக்காளர் தகவல் சீட்டு வழங்கும் பணி இன்று தொடக்கம்



**சென்னை, ஏப்.12:** சென்னை மாநகராட்சி வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:-

சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளில் 13,95,716 ஆண் வாக்காளர்கள், 14,96,921 பெண் வாக்காளர்கள், 868 இதர வாக்காளர்கள் என மொத்தம் 28,93,505 வாக்காளர்கள் உள்ளனர். 975 இடங்களில் மொத்தம் 4,085 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், வாக்காளர்களுக்கு நாளை (ஞாயிற்றுக்கிழமை) முதல் 18-ந்தேதி வரை வாக்காளர் தகவல் சீட்டு (பூத் சிலிப்) அந்தந்தப் பகுதிகளின் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் (பி.எல்.ஓ.) மூலமாக வினியோகம் செய்யப்பட உள்ளது.

தேர்தல் நடத்தும் அலுவலர்கள் வாக்காளர் தகவல் சீட்டு வினியோகத்திற்கான அட்டவணையை தயாரித்து, அதன் அடிப்படையில் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக வழங்கப்பட உள்ளது. ஒவ்வொருவாக்குச்சாவடி நிலை அலுவலருக்கும் ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிக்குட்பட்ட வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டினை வழங்கி கையெழுத்து அல்லது விரல் அடையாளத்தை பெற தெரிவிக்கப்பட்டுள்ளது.

வினியோகிக்கப்படாத வாக்காளர் தகவல் சீட்டு அனைத்தும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மூலமாக தேர்தல் நடத்தும் அலுவலரிடம் திருப்பி வழங்கிடவும், அவை மூடும் உறையில் பாதுகாப்பாக வைத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும், இந்திய தேர்தல் ஆணையம் வெளியிட்டுள்ள அறிவுறுத்தலின்படி, வாக்காளர்களின் வசதியை அதிகரிக்கும் நோக்கில், வாக்காளர் தகவல் சீட்டு வடிவமைப்பில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மாற்றியமைக்கப்பட்ட வடிவமைப்பில் வாக்காளரின் வரிசை எண் மற்றும் பகுதி எண் ஆகியவை சீட்டின் மேல் வலது மூலையில் பெரிய எழுத்துருவில் தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்கும்.

இந்த மாற்றம் மூலம் வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சாவடியை எளிதில் அடையாளம் காணவும், வாக்குப்பதிவு அலுவலர்கள் வாக்காளர் பெயரை வாக்காளர் பட்டியலில் விரைவாக கண்டறியவும் உதவியாக இருக்கும்படி அமைக்கப்பட்டுள்ளது.

## சிங்கப்பூரில் இருந்து சென்னை வந்த ஏர் இந்தியா விமானத்தில் கடத்திய 2 கிலோ தங்க கட்டிகள் பறிமுதல்

**சென்னை, ஏப்.12:** சிங்கப்பூரில் இருந்து நேற்று முன்தினம் ஏர் இந்தியா பயணிகள் விமானம் சென்னை வந்தது.

பயணிகள் வெளியேறியதும் லோடர்கள், விமானத்தை சுத்தம் செய்யும் பணியில் ஈடுபட்டனர். அப்போது, பயணிகள் இருக்கையின் அடியில் கருப்பு கலரில் பார்சல் ஒன்று கிடந்தது.


உடனே விமான நிலைய மேலாளருக்கு தகவல் தெரிவித்தனர். சுங்கத்துறை உயர் அதிகாரிகள் பார்சலை கைப்பற்றி வெடிகுண்டு ஏதேனும் உள்ளதா என சோதனை செய்தனர்.

பின்னர், பார்சலை பிரித்து பார்த்தபோது 2 கிலோ எடைகொண்ட சுத்தமான 24 கேரட் தங்க கட்டிகள் இருந்தன. இதன் சர்வதேச மதிப்பு சுமார் ரூ.3.10 கோடி.

இதையடுத்து தங்க கட்டிகளை சுங்க அதிகாரிகள் பறிமுதல் செய்து விசாரித்தனர். கடத்தலில் ஈடுபட்ட பயணி, தங்க கட்டிகளை இருக்கையின் அடியில் மறைத்து வைத்துவிட்டு, இறங்கிய நிலையில் விமானத்தை சுத்தப்படுத்தும் லோடர் அல்லது விமான நிலைய கடைநிலை ஊழியர் மூலமாக, தங்க கட்டிகளை வெளியில் எடுத்து வருவதற்கு திட்டமிட்டு இருக்கலாம் என்று தெரிகிறது.

இதையடுத்து சுங்க அதிகாரிகள், அந்த இருக்கையில் அமர்ந்து பயணம் செய்த பயணியின் விவரங்களை சேகரித்ததோடு, விமானத்துக்குள் உள்ள கண்காணிப்பு கேமரா மற்றும் சர்வதேச விமான நிலைய வருகைப் பகுதியில் உள்ள கண்காணிப்பு கேமரா காட்சிகளை வைத்து, தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

## இணையத்தில் கசிந்தது 'ஜனநாயகன்' - விஜய், படக்குழுவினர் அதிர்ச்சி; டிஜிபியிடம் புகார்: முழு விவரம்



சென்னை: திரைப்படத் தணிக்கை வாரியத்தின் சான்றிதழுக்காக காத்திருக்கும் நிலையில், விஜய் நடித்துள்ள 'ஜனநாயகன்' முழு திரைப்படமும் நேற்று இணையத்தில் வெளியாகி வைரலானதால் விஜய் உள்ளிட்ட படக் குழுவினர் அதிர்ச்சி அடைந்துள்ளனர். இதுகுறித்து நடவடிக்கை எடுக்கக் கோரி டிஜிபியிடம் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

தவெக தலைவர் விஜய் நடித்துள்ள திரைப்படம் 'ஜனநாயகன்'. ஹெச். வினோத் இயக்கத்தில் பூஜா ஹெக்டே, மமிதா பைஜு, பாபி தியோல் உள்ளிட்ட பலர் நடித்துள்ளனர். ரூ.500 கோடி பட்ஜெட்டில் பிரம்மாண்டமாக தயாரிக்கப்பட்ட படம் என்பதாலும், தமிழகம், புதுச்சேரி சட்டப்பேரவைத் தேர்தலில் முதல்முறையாக களமிறங்கியுள்ள விஜய்யின் கடைசி திரைப்படம் என்று அறிவிக்கப்பட்டதாலும், ரசிகர்கள் மத்தியில் இத்திரைப்படம் பெரும் எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது.

கடந்த ஜனவரி மாதம் பொங்கல் பண்டிகைக்கு இப்படம் வெளியாகும் என அறிவிக்கப்பட்ட நிலையில், தணிக்கைப் பிரச்சினை காரணமாக இதுவரை வெளியாகவில்லை. நீண்ட போராட்டத்துக்குப் பிறகு, படத்தை மறுதணிக்கைக் குழு கடந்த மாதம் பார்த்தது. படத்துக்கு விரைவில் தணிக்கைச் சான்றிதழ் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த சூழலில், 'ஜனநாயகன்' படத்தில் இடம்பெற்றுள்ள சுமார் 5 நிமிட வீடியோ காட்சி இணையத்தில் கடந்த 9-ம் தேதி வெளியானது. பல்வேறு வலைதளங்களிலும் இது வேகமாக பகிரப்பட்டது. இதனால், படத் தயாரிப்பு நிறுவனமும், படக் குழுவினரும் அதிர்ச்சியடைந்தனர். இந்த நிலையில், 'ஜனநாயகன்' முழு திரைப்படமும் நேற்று அதிகாலை இணையத்தில் சட்டவிரோதமாக மர்ம நபர்களால் வெளியிடப்பட்டது. இணையம் மற்றும் வலைதளங்களில் இதுவும் வேகமாக பகிரப்பட்டது. திரைப்படத் தணிக்கை வாரியத்தின் சான்றிதழுக்காக காத்திருக்கும் சூழலில், முழு படமும் இணையத்தில் வெளியானது விஜய் உள்ளிட்ட படக் குழுவினருக்கு பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. விஜய் ரசிகர்களும் அதிர்ச்சி அடைந்தனர்.

இணையத்தில் முழு திரைப்படத்தையும் மர்ம நபர்கள் சட்ட விரோதமாக வெளியிட்டதற்கு நடிகர் சங்க பொதுச் செயலாளர் விஷால், நடிகர்கள் ரஜினிகாந்த், சூர்யா, சிரஞ்சீவி, சிவகார்த்திகேயன், விஜய் ஆண்டனி, ஜீவா, ஜி.வி.பிரகாஷ் குமார், தயாரிப்பாளர் சுரேஷ் காமாட்சி உட்பட திரையுலகினர் பலரும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

ரஜினிகாந்த் தனது வலைதளப் பதிவில், 'ஜனநாயகன் திரைப்படம் இணையத்தில் யாராலோ வெளியிடப்பட்டிருப்பது அதிர்ச்சி, வேதனையை அளிக்கிறது. திரை அமைப்புகள் இதற்கு எதிராகக் குரல் எழுப்ப வேண்டும். அரசு இதைச் செய்தவர்களைக் கண்டுபிடித்து கடுமையான தண்டனை அளிக்க வேண்டும். இது போன்ற குற்றம் இனியும் தொடரக்கூடாது' என்று தெரிவித்துள்ளார்.

தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனமான 'பெப்சி' அமைப்பும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது. 'இதுபோன்ற செயல்களை மத்திய, மாநில அரசுகள் தடுத்து, ஜனநாயகன் படத்தையும், திரைத்துறையையும் பாதுகாக்க வேண்டும்' என்று கோரிக்கை விடுத்துள்ளது. திரைப்படத்தை இணையத்தில் கசியவிட்டவர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி, தமிழ்த் திரைப்பட தயாரிப்பாளர் சங்க முன்னாள் தலைவர் கேயார், டிஜிபியிடம் புகார் கொடுத்துள்ளார்.

சட்டப்படி நடவடிக்கை: இதற்கிடையே, 'ஜனநாயகன்' திரைப்படக் காட்சிகளை பகிர்ந்தால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தயாரிப்பாளர் தரப்பில் வழக்கறிஞர் விஜயன் சுப்பிரமணியன் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: 'ஜனநாயகன்' படத்தின் கசிந்த காட்சிகள் அல்லது காணொளியை வாட்ஸ்அப், டெலிகிராம், இன்ஸ்டாகிராம், முகநூல், எக்ஸ், யூ-டியூப், இணையதளங்கள் உள்ளிட்ட எந்த டிஜிட்டல் ஊடகம் வழியாகவும் பதிவிறக்கம் செய்வது, அனுப்புவது, பகிர்வது, பதிவேற்றம் செய்வது, மீண்டும் பதிவிடுவது, சேமிப்பது, பரப்புவதுகடுமையான குற்றச்செயல் மற்றும் பதிப்புரிமை மீறல் ஆகும். இதில் சம்பந்தப்பட்டவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கப்படும்.

'ஜனநாயகன்' படத்தின் காட்சிகளை சட்டவிரோதமாகப் பதிவிறக்கம்செய்து அனுப்பிய நபருக்கு எதிராக எனது கட்சிக்காரர் ஏற்கெனவே உரியசட்ட நடவடிக்கை தொடங்கிஉள்ளார். மேலும், இத்தகைய சட்ட விரோத செயல்களில் ஈடுபட்ட அனைத்து நபர்களுக்கும் எதிராக மேலதிக நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதுபோன்ற செயல்களில் ஈடுபடும் எவரும், அதன் விளைவுகளுக்கு, உடனடி உரிமையியல் மற்றும் குற்றவியல் நடவடிக்கைகளை எதிர்கொள்ள நேரிடும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து 1500 கனஅடியாக அதிகரிப்பு



**ஒகேனக்கல், ஏப்.12:** கர்நாடகா காவிரி கரையோரங்களில் பெய்த மழையின் காரணமாக ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து குறைவதும் அதிகரிப்பதுமாக இருந்து வருகிறது.

இந்த நிலையில் தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து நேற்று 1000 கன அடியாக வந்தது.

இதையடுத்து காவிரி நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை பெய்தது. இதனால் இன்று காலை 8 மணி நிலவரப்படி 1500 கனஅடியாக தண்ணீர் அதிகரித்து வந்தது. இதனால் மெயின் அருவி, சினிபால்ஸ், ஐந்த ருவி உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதனால் சுற்றுலா பயணிகள் பரிசல் பயணம் செய்து காவிரி ஆற்றின் அழகை ரசித்தனர்.

மேலும் அவர்கள் தொங்கு பாலத்தில் நின்று காவிரி ஆற்றில் பாறைகளுக்கு நடுவே விழும் தண்ணீரை ஆர்வமுடன் ரசித்து மகிழ்ந்தனர். பின்னர் மெயின் அருவியில் குளித்தும், பெண்கள் ஆற்றில் குளித்தும் மகிழ்ந்தனர்.

உண்மைதானே..! உதயநிதி சொன்னதில் என்ன தவறு?- இ.பி.எஸ் குறித்து சசிகலா பேச்சு

நீர்வரத்தை தமிழக-கர்நாடக எல்லையான பிலிகுண்டுலுவில் மத்திய நீர்வளத்துறை அதிகாரிகள் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர்.

# காவலர்கள் தபால் வாக்குப்பதிவு செய்யும் தேதி மாற்றம்

**சென்னை, ஏப்.12:** 2026 தமிழ்நாடு சட்டமன்ற தேர்தலில், காவலர்கள் மற்றும் தேர்தல் பணியில் ஈடுபடுவோர் தபால் வாக்கு செலுத்த, வாக்குப்பதிவுக்கு முந்தைய 3 நாட்கள் வாக்குப் பதிவு மையங்கள் (PVC) செயல்படும் என தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது. இது வாக்கெடுப்பு நடைபெறும் தேதிக்கு 3 நாட்களுக்கு முன்பே முடிவடைய வேண்டும் என நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலில் காவலர்கள் தபால் வாக்குப்பதிவு செய்யும் தேதி மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அதன்படி, வரும் 18 மற்றும் 20ம் தேதிகளில் காவலர்கள் தபால் வாக்குகளை பதிவு செய்யலம் என சென்னை காவல்துறை சுற்றிறிக்கை விடுத்துள்ளது. சென்னை, வெளிமாவட்டங்களில் பணியாற்றும் காவலர்களுக்கு இதுவரை 18,000 தபால் வாக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

# சென்னை சென்டிரல்-மேற்குவங்கம் இடையிலான எக்ஸ்பிரஸ் ரெயில் சேவையில் மாற்றம்

**சென்னை, ஏப்.12:** தெற்கு ரெயில்வே வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் கூறியிருப்பதாவது:-

பயணிகளின் வசதிக்காக எக்ஸ்பிரஸ் ரெயில்கள் ஜார்கண்ட் மாநிலம் பாகூர் ரெயில் நிலையத்தில் நின்று செல்லும். அதன்படி, சென்னை சென்டிரலில் இருந்து மேற்குவங்க மாநிலம் நியூ ஜல்பாய்குரி செல்லும் அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரெயில் (வண்டி எண்-22611) பாகூர் ரெயில் நிலையத்தில் 2 நிமிடம் நின்று செல்லும். அதே போல, நியூ ஜல்பாய்குரியில் இருந்து சென்னை சென்டிரல் வரும் அதிவிரைவு எக்ஸ்பிரஸ் ரெயில் (22612) இன்று முதல் பாகூர் ரெயில் நிலையத்தில் 2 நிமிடம் நின்று செல்லும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# மிளகாய் பறிக்க சென்ற மூதாட்டி உயிரிழப்பு: வெயில் கொடுமையால் சோகம்

**தூத்துக்குடி, ஏப்.12:** தூத்துக்குடி மாவட்டம் குளத்தூர் மேலத்தெருவைச் சேர்ந்த செல்லையா மகள் வள்ளியம்மாள் (வயது 70). திருமணமாகாத இவர், குளத்தூர்-வேடநத்தம் சாலையில் தனக்கு சொந்தமான நிலத்தில் மிளகாய் பயிரிட்டிருந்தார். நேற்று காலை வழக்கம்போல் மிளகாய் பறிப்பதற்காக தனது நிலத்திற்கு சென்றுள்ளார்.

மாலை நேரமாகியும் வள்ளியம்மாள் வீடு திரும்பாததால் சந்தேகமடைந்த அக்கம்பக்கத்தினர், அவரது அக்கா மகன் காமராஜிற்கு தகவல் தெரிவித்தனர். உடனடியாக அவர் நிலத்திற்கு சென்று தேடியபோது, வள்ளியம்மாள் நிலத்தில் குப்புற விழுந்த நிலையில் சடலமாக கிடப்பதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.

இதுகுறித்து தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த குளத்தூர் போலீஸ் இன்ஸ்பெக்டர் ராமலட்சுமி மற்றும் போலீசார், வள்ளியம்மாளின் உடலை கைப்பற்றி பிரேதப் பரிசோதனைக்காக தூத்துக்குடி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

வள்ளியம்மாள் மிளகாய் பறித்துக் கொண்டிருந்தபோது, நிலவிய கடும் வெயில் மற்றும் வெப்பம் தாங்காமல் மயங்கி விழுந்து உயிரிழந்திருக்கலாம் எனத் தெரிகிறது. இந்த சம்பவம் குறித்து குளத்தூர் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஏப். 15 முதல் மீன்பிடி தடைகாலம் அமல் விசைப்படகுகள் 14ம் தேதிக்குள் கரைக்கு திரும்ப வேண்டும்

**மயிலாடுதுறை, ஏப்.12:** மயிலாடுதுறை மாவட்டத்தில் மீன்பிடி தடைக்காலம் வருகிற ஏப்ரல் 15ம் தேதி முதல் நடைமுறைக்கு வருவதால் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்றுள்ள விசைப்படகுகள் 14ம் தேதிக்குள் கரை திரும்ப வேண்டுமென மாவட்ட கலெக்டர் ஸ்ரீகாந்த் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு கடல் மீன்பிடிப்பு ஒழுங்குபடுத்தும் சட்டம் 1983-ன் கீழ் தமிழகத்தின் கிழக்கு கடல் பகுதி முழுவதிலும் (திருவள்ளூர் மாவட்டம் முதல் கன்னியாகுமரி மாவட்டம், கன்னியாகுமரி நகரம் வரை) மீன் இனப்பெருக்ககாலத்தைக் கணக்கில் கொண்டும், மீன்வளத்தைப்பாதுகாத்திடும் பொருட்டும், ஆண்டுதோறும் ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை (இரண்டு நாட்கள் உட்பட) 61 நாட்களுக்கு மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இழுவலைப் படகுகள் மூலமாக கடலில் மீன்பிடிப்பதற்கு தடைவிதித்து அரசால் ஆணை வழங்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட அரசாணையின்படி, கடலில் மீன்கள் இனவிருத்திக்கு ஏற்ற காலமான ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை உள்ள 61 நாட்கள் கடலில் மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மீன்பிடிப்பு செய்வதை நிறுத்தி வைப்பதன் மூலம் இடையூறு இல்லாத இனவிருத்தி மேம்பட்டு, மீன்வளம் பெருக வாய்ப்புள்ளதால் மீனவர்கள் நலன் கருதி 2026 ஆம் ஆண்டு ஏப்ரல் 15 முதல் ஜூன் 14 வரை உள்ள 61 நாட்கள் மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் இழுவைப் படகுகள் மூலம் மயிலாடுதுறை மாவட்ட மீனவர்கள் எவரும் கடலுக்கு மீன்பிடிக்க செல்லக்கூடாது என இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், மீன்பிடித் தடைக்காலம் அமலுக்கு முன்னர் கடலுக்கு சென்ற மீன்பிடி விசைப் படகுகள் மற்றும் ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள படகுகள் அனைத்தும் வரும் 14.4.2026 இரவு 12 மணிக்குள் கட்டாயம் கரைக்கு திரும்ப வேண்டும் என்றும், ஆழ்கடல் பகுதியில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ள படகுகளுக்கு மீன்பிடித் தடைக்காலம் குறித்த தகவலை VHF/Satellite Phone மறும் பிற தகவல் தொடர்பு சாதனங்கள் மூலம் தெரிவித்து உடனடியாக கரைக்கு திரும்பிட முன்கூட்டியே அறிவுறுத்துமாறு அனைத்து மீன்பிடிப் படகு உரிமையாளர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள் என மாவட்ட கலெக்டர் ஸ்ரீகாந்த் உத்தரவிட்டுள்ளார்.

# நஞ்சநாடு அருகே பகல் நேரத்தில் தேயிலை தோட்டத்தில் ஓய்வெடுத்த சிறுத்தையால் பரபரப்பு

**ஊட்டி, ஏப்.12:** ஊட்டி அருகே நஞ்சநாடு பகுதியில் பகல் நேரத்தில் தேயிலை தோட்டத்தில் ஓய்வெடுத்த சிறுத்தையால் அந்த பகுதி மக்கள் அச்சமடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் காட்டுமாடு, கரடி, சிறுத்தை உள்ளிட்ட வன விலங்குகளின் எண்ணிக்கை கணிசமான அளவு அதிகரித்துள்ளது. ஆனால் அதற்கேற்ப வனப்பரப்பு இல்லாதது, வனத்தை ஒட்டிய பகுதிகளில் கட்டுமானங்கள் அதிகரிப்பு உள்ளிட்ட காரணங்களால் வனவிலங்குகள் குடியிருப்பு பகுதிகளில் அடிக்கடி தென்படுவது அதிகரித்துள்ளது.



அவ்வாறு வரும் சிறுத்தை உள்ளிட்ட வனவிலங்குகள் கால்நடைகளை வேட்டையாடி வருகின்றன. சில சமயங்களில் மனிதர்களையும் தாக்கும் சம்பவங்களும் ஏற்படுகின்றன. இதனால் அந்த பகுதிகளில் அவ்வப்போது மனித-வன விலங்கு மோதல் நிகழ்கின்றன. கடந்த சில நாட்களுக்கு முன் நுந்தளாமட்டம் தனியார் தேயிலை தோட்டத்தில் உள்ள ஒரு சில்வர் ஒக் மரத்தில் சிறுத்தை ஓய்வெடுத்தது.இதே போல குன்னூர் பகுதியில் காட்டுமாடு குட்டியை வேட்டையாடி மரத்தில் தொங்கவிட்ட வீடியோக்கள் வைரலாகி பரபரப்பை ஏற்படுத்தின.

இந்த பரபரப்பு அடங்குவதற்குள் ஊட்டி அருகே நஞ்சநாடு பகுதியில் தேயிலை தோட்டத்தில் சிறுத்தை ஒன்று பகல் நேரத்தில் ஓய்வெடுத்துக் கொண்டிருந்தது. அந்த வழியாக வாகன ஓட்டிகள் வந்ததை பார்த்து சற்று சுதாரித்த சிறுத்தை சிறிது நேரம் அங்குமிங்கும் நோட்டமிட்டவாறு உடனடியாக வனப்பகுதிக்குள் சென்று மறைந்தது. இந்த சம்பவத்தை அந்த வழியாக சென்ற உள்ளூர் மக்கள் புகைப்படம் எடுத்து சமூக வலைதளங்களில் பதிவிட்டனர். இந்த புகைப்படம் தற்போது வைரலாகி வருகிறது. நீலகிரி மாவட்டத்தில் ஊட்டி குன்னூர் பகுதிகளில் சிறுத்தை நடமாட்டம் மிகப்பெரிய அளவில் அதிகரித்திருப்பதால் பலரும் அச்சமடைந்துள்ளனர்.

# தூத்துக்குடியில் சிலிண்டர் வாங்க 2 மணி நேரம் வரிசையில் காத்திருக்கும் மக்கள்

**தூத்துக்குடி, ஏப்.12:** சமையல் எரிவாயு சிலிண்டர் பதிவு செய்தவர்களுக்கு, வீட்டிற்கே வந்து டெலிவரி செய்வது வழக்கம். ஆனால், தற்போது ஈரான் - இஸ்ரேல் போர் காரணமாக சிலிண்டர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், தூத்துக்குடி மாவட்டம் புதியம்புத்தூரில் எச்.பி. சிலிண்டர் பதிவு செய்தவர்களுக்கு லாரியில் கொண்டு வந்து பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

சிலிண்டர் பெறுவதற்காக ஆண்கள் பெண்கள் என 100க்கும் மேற்பட்டோர் தனித்தனி வரிசையில் காலி சிலிண்டர்களுடன் நிற்கின்றனர். சுமார் 2 மணி நேரம் காத்திருந்து, புதிய சிலிண்டரை வாங்கிச்செல்கின்றனர். சிலர் வரிசையில் நிற்காமல் சிலிண்டர் வாங்கமுண்டியடித்துக்கொண்டு முன்னே சென்றதால் சலசலப்பு ஏற்பட்டது. இதனால் ஒரு போலீஸ்காரர் அங்கு சென்று வரிசையை ஒழுங்குபடுத்தி அனைவரும் சிலிண்டர் பெற வழிவகை செய்து வருகிறார். நீண்ட நேரம் வரிசையில் நிற்பதால், மக்கள் அவதியடைந்து வருகின்றனர்.

# சென்னையில் ரூ.29 கோடி மதிப்பிலான நகைகள் பறிமுதல்

**தி,நகர், ஏப்.12:** தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் வருகிற ஏப்ரல் 23-ந் தேதி, நடைபெறுகிறது.

தேர்தல் தேதி அறிவித்த பின்பு தேர்தல் நடத்தை விதிமுறைகள் உடனடியாக அமலுக்கு வந்தது. சட்டசபை தேர்தலை முன்னிட்டு வாக்காளர்களுக்கு அரசியல் கட்சியினர் பணம், பரிசு பொருட்களை கொடுப்பதை தடுக்கும் வகையில் தேர்தல் பறக்கும் படையினர் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகிறார்கள்.



வாகனசோதனையின்போது உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்படும் பணம் மற்றும் நகைகளும் பறிமுதல் செய்யப்பட்டு வருகின்றன.

சென்னை தி.நகரில் தேர்தல் பறக்கும் படையினரின் வாகன சோதனையில், 28 கோடியே 54 லட்சம் மதிப்புள்ள தங்கம் மற்றும் வெள்ளி நகைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

நகைக்கடைகளுக்கு கொண்டு செல்லப்படுவதாக கூறப்பட்ட நிலையில், உரிய ஆவணங்கள் இல்லாமல் கொண்டு செல்லப்பட்டதால், பறிமுதல் செய்து நுங்கம்பாக்கம் வருமான வரித்துறை அதிகாரிகளிடம் நகைகள் ஒப்படைக்கப்பட்டுள்ளது.




# மகிளா காங்கிரஸ் தலைவர் பதவி நீக்கம்: செல்வப்பெருந்தகை மீது பரபரப்பு குற்றச்சாட்டு

**சென்னை, ஏப்.12:** மகிளா காங்கிரஸ் தலைவர் பதவியில் இருந்து ஹசீனா சையத்தை நீக்கி கட்சி மேலிடம் உத்தரவிட்டுள்ளது. சட்டப்பேரவைத் தேர்தலில் உரிய வாய்ப்பு வழங்கப்படவில்லை எனக் கூறி கருப்பு உடை அணிந்து, மகிளா காங்கிரஸார் சென்னை கோயம்பேட்டில் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அப்போது மகிளா காங்கிரஸ் தலைவர் ஹசீனா சையத் கூறியதாவது: மேற்கு வங்கம், கேரளம், அசாமில் பெண்களுக்கு உரிய முக்கியத்துவம் அளிக்கப்பட்டு, மகிளா காங்கிரஸ் மாநிலத் தலைவிகள் போட்டியிட வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தமிழகம், புதுச்சேரியில் மகிளா காங்கிரஸ் திட்டமிட்டு ஓரங்கட்டப்பட்டுள்ளது.

கிருஷ்ணகிரி அல்லது மயிலாடுதுறை தொகுதியில் போட்டியிடுவதற்கான அனைத்து பணிகளையும் நான் மேற்கொண்டு வந்தேன். ஆனால், மகிளா காங்கிரஸ் நிர்வாகிகள் யாருக்கும் வாய்ப்பளிக்கவில்லை.

மாணவர் பருவம் முதல் கடந்த 30 ஆண்டுகளாகக் கட்சிக்காக உழைத்து வருகிறேன். நாங்கள் வாய்மூடி இருப்பதாலேயே எங்களுக்கு மிகப்பெரிய அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இதற்கு மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை பதில் சொல்லியே தீர வேண்டும்.

மேலூர் தொகுதி நான் இஸ்லாமியச் சமூகத்தைச் சேர்ந்தவர் என்பதால் இப்படிச் செய்கிறீர்களா? கடந்த 5-ம் தேதி மேலிடப் பொறுப்பாளர் கிரிஷ் சோடங்கர் எனக்குப் போன் செய்து, மேலூர் தொகுதி உனக்குத்தான் என்று கூறி ஆவணங்களைத் தயார் செய்யச் சொன்னார். ஆனால், கடைசி நேரத்தில் வேறு ஒருவரை அறிவித்துவிட்டார்கள்.

தேசியத் தலைவரும், மாநிலத் தலைவரும் இணைந்து எங்களுக்குத் துரோகம் செய்துள்ளார்கள். நாங்கள் ஏற்கெனவே ராஜினாமா கடிதத்தை அனுப்பிவிட்டுதான் இங்கு வந்துள்ளோம். நான் கட்சியை விட்டுச் செல்லவும் தயாராக உள்ளேன்.

நாங்கள் மதிக்கும் தலைவர் ராகுல் காந்தியை விமான நிலையத்தில் சென்று வரவேற்கக் கூட செல்வப்பெருந்த கைக்கு மனமில்லை. அவர் கோட்சேவைப் போல செயல்படுகிறார், இவ்வாறு அவர் கூறினார். இதற்கிடையே மகிளா காங்கிரஸ் மாநிலத் தலைவர் பதவியில் இருந்து ஹசீனா சையத் நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக அகில இந்திய மகிளா காங்கிரஸ் தலைவர் அல்கா லம்பா வெளியிட்ட அறிக்கையில், “தமிழ்நாடு மாநில மகிளா காங்கிரஸ் தலைவராக இருக்கும் ஹசீனா சையத், கட்சிக்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டதால், பதவியிலிருந்து அவர் நீக்கப்படுகிறார். கட்சியின் விதிமுறைகளின்படி, தேவைப்படும் பட்சத்தில் மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்படும்” என தெரிவிக்கப்பட்டுள்ளது.

# திமுக எம்எல்ஏவின் திமிருக்கும், ஆணவத்திற்கும் தேர்தலில் பொது மக்கள் பதிலளிப்பார்கள் - அண்ணாமலை

**கோவை, ஏப்.12:** தமிழக பாஜக முன்னாள் தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் தள பதிவில் கூறி இருப்பதாவது:-

கிட்னி திருட்டு புகழ் மணச்சநல்லூர் திமுக சட்டமன்ற உறுப்பினர், கதிரவன், தேர்தல் பரப்புரையின் போது, தங்கள் ஊர் ஏரிக்கு தண்ணீர் இல்லை என்று கோரிக்கை வைத்த கிராம மக்களை, லூசு என்றும், நீ ஒன்றும் எனக்கு ஓட்டு போட வேண்டாம் என்றும் இழிவாகப் பேசியிருக்கிறார்.

வழக்கமாக, தேர்தல் முடிந்தவுடன் தான், திமுகவினர் தங்கள் சுயரூபத்தைக் காட்டுவார்கள். ஆனால், தேர்தல் பிரசாரம் செய்யும் ஒரு மாத காலம் கூட, திமுகவினரால் பொதுமக்களுக்கு மரியாதை கொடுக்க முடியவில்லை.

ஐந்து ஆண்டுகளாக அப்பாவி பொதுமக்களை ஏமாற்றிக் கொண்டிருந்த திமுக எம். எல்.ஏ. கதிரவனுக்கு, தற்போது தேர்தல் அறிவித்து விட்டதால், ஏரியைச் சீரமைக்க முடியவில்லையாம். ஐந்து ஆண்டுகளாக அவரது தந்தைக்கு 15 கோடியில் வெளிநாட்டு கார் வாங்க உழைத்துக் கொண்டிருந்தவருக்கு, வாக்களித்த மக்களைப் பற்றிச் சிந்திக்க ஏது நேரம்?

திமுக எம்எல்ஏவின் திமிருக்கும், ஆணவத்திற்கும், மணச்சநல்லூர் பொதுமக்கள் இந்தத் தேர்தலில் சரியான பதிலளிப்பார்கள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# “உண்மையான மக்களாட்சியை அமைப்போம்..” - தொண்டர்களுக்கு விஜய் அழைப்பு



**சென்னை, ஏப்.12:** தமிழக வெற்றிக் கழகத் தலைவர் விஜய் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:-

என் நெஞ்சில் குடியிருக்கும் தோழர்கள் அனைவருக்கும் வணக்கம்.

வாகை சூடும் வரலாறு திரும்பும் பயணத்தில் உங்கள் ஒவ்வொருவரின் பங்களிப்பும் அளப்பரியது, இன்றியமையாதது. மாற்றத்திற்கான முதன்மைச் சக்தியான நாம், நமது வெற்றிப் பாதையில் சரியாகப் பயணித்துக்கொண்டிருக்கிறோம்.

தேர்தல் நாள் வேகமாக நெருங்கி வரும் இந்த வேளையில் ஒரு வேண்டுகோள். வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்களாகத் தங்களைத் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைத்துக்கொண்டு நம்மோடு தோழர்களாகப் பயணிப்பவர்கள், கழகத்தின் மீது பேரன்பு கொண்டுள்ள என்னுடைய நண்பா, நண்பிகள் அனைவரும் களத்தில் இறங்கிப் பணியாற்றுங்கள்.

அடுத்த பத்து நாள்களும் உங்களுக்கு உகந்த நேரத்தில் காலை, மாலை என இரு வேளையும் அவரவர் வசிக்கும் இடங்களில் தினமும் நம் சொந்தங்களாகிய தமிழ்நாட்டு மக்களை வீட்டுக்கு வீடு தேடித் தேடி நேரில் சந்தியுங்கள். நமது கழக வேட்பாளர்களுக்கு விசில் சின்னத்தில் வாக்களிக்குமாறு வேண்டுகோள் வையுங்கள். இந்தக் களப்பணியில் தன்னார்வலர்களாக உங்களை இணைத்துக்கொள்ளுமாறு பேரன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மாநில மற்றும் அனைத்து நிலை மாவட்டக் கழக நிர்வாகிகள், நமது கழகத்தின் சார்பாகப் போட்டியிடும் வேட்பாளர்களுக்கு முழுமையான ஒத்துழைப்பைத் தாருங்கள். அனைவரையும் அரவணைத்துத் தேர்தல் பணியாற்றுங்கள். தன்முனைப்பற்ற தோழமை உணர்வோடு அனைவரும் வீட்டுக்கு வீடு சென்று மக்களைச் சந்தியுங்கள்.

இந்தத் தேர்தல் நமக்கானது மட்டுமல்ல, மாபெரும் மாற்றத்திற்கான, ஒரு தலைமுறைக்கான தேர்தல் என்பதை விளக்குங்கள். தன்னலமற்ற உழைப்பைச் செலுத்தி, நமது வெற்றிப் பயணத்திற்கு வலு சேருங்கள்.

ஜனநாயகத்தை நிலைநாட்டுவதற்கான இந்தப் போரில் வெற்றிப் பேரணியாக ஒட்டுமொத்தத் தமிழ்நாடும் ஒன்று சேர்ந்து உண்மையான மக்களாட்சியை அமைப்போம்! வாகை சூடும் வரலாறு திரும்புகிறது! நல்லதே நடக்கும்! வெற்றி நிச்சயம்! இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

PUBLISHED BY R.S ROSHINE PRINTED BY R.S. ROSHINE ON BEHALF OF R.S. ROSHINE PRINTED AT J.M. PROCESS, NO 29, V.N. DOSS ROAD, BORDERTHOTTAM, MOUNT ROAD, CHENNAI – 600002.
AND PUBLISHED FROM NO. 42/62, BUCHAMMAL STREET, 1ST FLOOR, NEW WASHERMENPET, TONDIARPET, CHENNAI, TAMILNADU – 600081. EDITOR: R.S.ROSHINE, PH: 8122836299, E-MAIL: ANANDABHASKARNEWS@GMAIL.COM